# மாலைமணி

ஆசிரியர்: பி.எஸ்.இளங்கோ

வெண் புறா பறக்குமா? குண்டுகள் தான் வெடிக்குமா?



மாலைமணி
ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ
மணி 2 | 10-4-60 ஒலி 23

# "மாலைமணி" இல்லை— மக்கள் விடும் சவால்!

தமிழுலகப் பேரறிஞன், அறிவுலக ஜோதி அறிஞர் அண்ணு அவர்களால் துவக்கப்பட்ட மாலைமணி இன்று பெருமையுடன்—அவரது பெயருக்கும், கொள்கைக்கும் சிறிதும் இழுக்கு ஏற்படா வண்ணம், வெற்றி முரசம் கொட்டி, விடுதலை கீதம் பாடி வருவதை எல்லா நண்பர்களும் உணர்வார்கள்!

திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கப்பட்ட காலத்தில் கழகத்தின் இலட்சிய ஏடாக—தின இதழாக உங்களிடையே பணிபுரிந்து வந்த வரலாறும், அதற்குப் பின்பு சில மாற்றங்கள் நடைபெற்ற நிகழ்ச்சியும் யாவரும் அறிந்ததே!

"மாலை நேரம் எப்போது வரும், மணி எப்போது ஒலிக்கும்" என்று ஏங்கிக் காத்துக் கிடந்த மக்கள் எண்ணிக்கையில் அடங்கா—ஏராளம்! மிக ஏராளம்! அனல் அடங்கி, புனல்கலந்த காற்று வீசினுலும் மக்களுக்கு மகிழ்ச்சி ஏற்படுவதில்லை. மாலைமணி வந்தால்தான் மக்கள் மகிழ்ச்சியடைவார்கள்!

இதற்கெல்லாம் காரணம் அந்த அறிவுலகத் தந்தை அறிஞர் அண்ணுவின் பேச்சுக்கும், எழுத்துக்கும் நாமெல்லாம் தவம் கிடந்தோம்! ஒரு நாள் உணவைக் கழித்தாலும் நம் உள்ளம் வாடாது, உடலும் வதங்காது! அண்ணு தரும் அறிவுணவை நாம் ஒருவேளை புசிக்கா விட்டாலும நம் உள்ளமும், உடலும் தாங்கவே தாங்காது! அத்தனை அற்புத சக்தி படைத்த அதிசய மனிதரின் ஏடு என்ருல் யாருக்குத்தான் இனிக்காது! எனவே தான் "மாலைமணி" என்ருல் மகிழ்ந்தார்கள், மகிழ்ச்சியோடு வரவேற்ருர்கள்! அந்த செல்வாக்கு இன்றளவும் குறையவில்லை!

"மாலைமணி"யை அன்றைய தினம் மக்கள் எந்த அளவுக்குக் குன்ருத ஆர்வத்தோடு வரவேற்ருர்களோ, அதே ஆர்வத்தோடு இன்றும் வரவேற்கிருர்கள், விரும்பிப் படிக்கிருர்கள்!

இதற்குக் காரணம் என்ன? பலர் பலவிதமான காரணங்களை—தங்கள், தங்கள கற்பனை வளத்திற்கு ஏற்றவாறு கண்டு பிடித்து வருகிருர்கள்!

பலர் காரணம் தெரியாமல் ஆயாசப்படுகிருர்கள்,—பலர் அதிசயப் படுகிருர்கள், பலர் பொருமையும், பொச்செரிப்பும் படுகிருர்கள்! "ஐயோ இவ்வளவு பிரதிகளா" என்று பெருமூச்சும் விடுகிருர்கள்!

"நாமும் தலைவர்களின் பேச்சுகளை வெளியிட்டால் "மாலைமணி"யாகி விடலாமே" என்று சிலர் ஆட்டு மந்தை வேலையையும் செய்ய முன் வரலாமா என்று யோசிக்கிருர்கள்!

"வெற்றியின் ரகசியம்" புரியாத அந்த பரிதாபத்திற்குரியவர்களைக் கண்டு உள்ளபடியே வருந்தத் தான் வேண்டி இருக்கிறது!

இந்த மாபெரும் வெற்றிக்குக் காரணம் என்ன? இதைக் கண்டு பிடிக்க பெரும் சக்தியை செலவிட்டாக வேண்டும்! பாலைவனத்தில் பளிங்கு நீரோடையைக் காண முடியாது! கானலைக் கண்டு விட்டு "தண்ணீர், தண்ணீர்" என்று கத்தினுலும் தாகம் அடங்காது—மேலும், மேலும், தாகம் தான் உண்டாகும்! இதை புரிந்து கொள்ள முடியாமல் "வெற்றி எங்கே? வெற்றி எங்கே" என்று சில அப்பாவிகள் தேடித்தேடி அலைகிருர்கள்! தேடிய பொருள்கிடைக்காத காரணத்தால் தேம்பித் தேம்பி அழவும் செய்கிருர்கள்! முடிவில் "மாலைமணி"யின் வழியே சரியான வழி என்ற முடிவுக்கும் வருகிருர்கள்!

மாலை மணியின் நிழலைக் கூட அந்த அசடர்களால் மிதிக்க முடியாது! மாலைமணி—இல்லை, இல்லை மக்கள் விடும் இந்த சவாலை அந்த பொருமைக்காரர்கள் ஏற்றுக் கொள்ளத்தயார்தாஞ?

மாலைமணி தலைவர்களின் சொற்பொழிவுகளை, தலைவர்கள் சொல்லிடும கருத்துக்களை வெளியிட்டு வளர்ந்தது என்பதை நாங்கள் என்றுமே மறுக்க மாட்டோம்! ஆனல் அது மட்டுமல்ல வெற்றிக்குக் காரணம் என்பதையும் உணர வேண்டும்!

மாலைமணிக்கு பொருமையில்லை, பொச்சரிட்டுமில்லை ஏற்றத் தாழ்வில்லை, சின்னவர், பெரியவர் என்ற பேதம் இல்லை, பதவியில் ஆசையில்லை, புகழில் நாட்ட மில்லை, பொருளில் பெரும்பற்றில்லை, விருப்பு, வெறுப்பில்லை, வேண்டியவர், வேண்டாதவர் என்ற குரோத எண்ணமிலலை!

மாலைமணிக்கு கொள்கையில் குழப்பமில்லை, தெளிவில்லாத சிந்தனையுமில்லை!

அறிஞர் அண்ணு அவர்கள் கூறியதுபோல மாலைமணி கொள்கைக்காகவே வாழும் ஏடு!

மாலைமணிக்கு கொள்கையே அதன் மூச்சு, இலட்சியமே அதன் உயிர்!

வெறும் பேச்சுகளை மட்டும் வெளியிட்டால் போதாது! இந்த இலட்சியங்களையும் கடைபிடிக்க வேண்டும்!

மாலைமணி எத்தகையவர்களுக்கும் அஞ்சாது பணி புரிந்து வெற்றி முழக்கம் செய்வதை நண்பர்கள் பலரும் அறிவார்கள்! வேண்டியவர்களுக்காக இலட்சியத்தை விட்டு, தாள் பணியும் பண்பும், வேண்டாதவர்களைத் தாக்கும் இழி குணமும் இல்லை!

எந்த இலட்சிய வாதிக்கும் முதலில் கொள்கையில் அழியாத பற்று வேண்டும்! அது ஹிட்லர் கொள்கையானுலும் சரி, அல்லது ஸ்டாலின் கொள்கையானுலும் சரி, அதில் பற்றுவைத்தால்தான் வெற்றி பெறமுடியும் கொள்கைக்குப் பிறகு தான் உற்ருர், உறவினர் பந்தம், பாசம், வேண்டியவர், வேண்டாதவர் எல்லாம் இதை உணர்ந்து கொள்ளாமல் வெறும் பேச்சுகளை மட்டும் வெளியிட்டு விற்பனையைப் பெருக்கிக் கொள்ளலாம் என்று சிலர் மனப்பால் குடிக்கின்றனர்! இந்தக் காலத்தில் மக்கள் ஏமாந்தவர்களாக இல்லை என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்!

பேச்சுகளை வெளியிட்டு விற்பனையைப் பெருக்கிக் கொள்ள கனவு காணும் அந்த நண்பர்களைக் கேட்கிருேம்—தயவு செய்து விடைதரவேண்டாம் செய்கையில் காட்டுங்கள் பார்க்கலாம்!

உதாரணமாக—நடிகமணி டி. வி. நாராயணசாமி, நடிகர் திலகம் சிவாஜிகணேசனைப்பற்றி பேசிய சொற்பொழிவு ஒன்றை சென்ற 3-4-60ம் தேதி இதழில் வெளியிட்டிருந்தோம்! அவரது பேசில் காட்டம் கலந்திருந்தது; கனலும் வீசிற்று! அதற்கேற்ற முறையில் நாங்கள் தலைப்புகளையும் தநது வெளியிட்டோம்!

மற்றவர்கள் இதை வெளியிட முன்வருவார்களா?

"ஐயோ சிவாஜி கணேசனையா திட்டுவது, அந்தப் பேச்சையா வெளியிடுவது—அவர்வேண்டியவராயிற்றே, அவரது விளம்பரங்கள் பிறகு கிடைக்காதே" என்று தான் மௌனம் சாதிப்பார்கள்!

(12-ம் பக்கம் பார்க்கவும்.)

# தூத்துக்குடி துறைமுகம் முதல், சென்னைவரை என் தொகுதிகளே! இதில் நான் எங்கு நின்றாலும் வெற்றி பெறுவேன்!

## ஆணவப்பேச்சு பேசும் ஆட்சியாளருக்கு அறிஞர் அண்ணா சவால்!

[சென்னை திருவல்லிக்கேணி சேப்பாக்கம் திராவிட முன்னேற்றக் கழகச் சார்பிலும், அஞ்சாநெஞ்சன் அழகிரி நினைவு மன்ற ஆண்டு விழாவும் 3-4-60ம் நாள் பார்த்தசாரதி நாயுடு தெருவில் நடைபெற்றது. அதுபோது வட்டத்து நகரமன்ற உறுப்பினர் தோழர் துரைக்கண்ணு அவர்களுக்குப் பாராட்டும் நடைப்பெற்றது.]

அதுபோது அறிஞர் அண்ணா அவர்கள் பேசியதாவது :—

அன்புள்ள தலைவர் அவர்களே! அருமை நண்பர்களே! தாய்மார்களே! பெரியோர்களே!! இன்று நடைபெறும் இந்த மாபெரும் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நான் காஞ்சீபுரத்திலிருந்து வந்திருக்கிறேன்.

இங்குள்ள நமது கழகத் தோழர்கள் மிகவும் சாமர்த்தியசாலிகள். நான் காஞ்சியில் ஒரு பொதுக் கூட்டத்தில் கலந்திருந்த என்னை உடனே வரவேண்டுமென்றும், பொதுக் கூட்டத்தில் பேசுவதற்கு சென்னையில் யாருமில்லை என்றும், நான் உடனே இங்குவர வேண்டுமென்றும் தொலை பேசி மூலம் பேசினார்கள். நான் அந்தக் கூட்டத்தில் நமது நண்பர் புரட்சி நடிகர் எம். ஜி. ராமசந்திரனை நீண்ட நேரம் பேசும்படி கூறி விட்டு நான் இங்கு வந்தேன்.

இங்கு நான் வரும்போது நமது நாவலர் அவர்கள் கோடிக்கணக்கான பணம் வடநாட்டிற்கு செலவழிப்பதைப் பற்றியும் செருப்புகள் தைப்பதற்கு நமது மாநிலத்தில் முடியாமல் வடநாட்டிற்கு கொடுக்கப்பட்டதைப் பற்றியும் புள்ளிவிவரங்களுடன் பேசிக் கொண்டிருந்தார். மாநில அரசினருக்கு நிர்வாகத் திறமை இல்லை என்பதையும் புள்ளி விவரங்களுடன் கூறிக் கொண்டிருந்தார்.

கோடியைவிட ஜோடியைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்ததை நமது மாற்றுக் கட்சி தோழர்கள் இனி கேலி செய்து பேசவும் செய்வார்கள்.

"இந்த கழகத்தார்; கேவலம் செருப்பைப்பற்றி பேசவந்து விட்டார்கள்" என்று கூறுவார்கள். நம்முடைய மூலாதாரக் கொள்கை, "திராவிட நாடு, திராவிடருக்கே" என்பதில் என்னென்ன கருத்துக்கள் சொல்ல வேண்டுமோ, மற்றும் அதற்கு ஆதாரமான லட்சியத்தில், எது எது எப்படி எப்படி கூற வேண்டுமோ, அதை நாம் சொல்லத்தான் செய்வோம்." வடக்கு வாழ்வதைப் பற்றியும், தெற்குத் தேய்வதைப் பற்றியும், செருப்பு தைப்பதிலிருந்து வேறு எதுவானாலும் மக்களிடம் சொல்வது தான் நமது வேலை.

அதை வைத்து, செருப்பைப் பற்றி பேசுகிறார்கள் என்று நம்மை கேலி செய்கிறவர்களுக்கு நான் ஒரு ஆதாரத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இராமாயணத்தை எழுதப் புகுந்த வால்மீகியும், கம்பரும். "பாதுகாபட்டாபிஷேகத்தைத் தான்", மிகச் சிறப்பாக எழுதியுள்ளார்கள். அதை அவர்கள் தள்ளிவிட முடியுமா? கேவலமாக பேச முடியுமா?

சிறு கைத்தொழில் பிரச்சனையில் நமதுநாடு எவ்வளவு கேவலமான நிலையில் தள்ளப்பட்டிருக்கிறது என்பதை நமது நாவலர் அவர்கள் மிக அழகாகவும், புள்ளி விவரங்களுடனும் உங்களுக்கு எடுத்துரைத்தார்." நான் அதற்குள் வந்து விட்டேன்; நான் வரவில்லையானால் இன்னும் புள்ளி விவரங்களுடன் எடுத்து கூறியிருப்பார்".

நான் மிகவும் அலுத்துப்போய் வந்திருக்கிறேன் என்பதை, என் பேச்சிலிருந்து நீங்கள் அறிந்து கொண்டிருப்பீர்கள். இருப்பினும் உங்களுக்கு சில விஷயங்கள் கூற நான் கடமைப் பட்டிருக்கிறேன். நான் இந்தக் கூட்டத்திற்கு வரும்போது, கடற்கரைப் பக்கமாக வந்தேன். நான் கடற்கரைப் பக்கமாக வந்தேன் என்று கூறும்போது உங்களுக்குஆச்சரியமாக இருக்கலாம். யார் யார்எதெதற்கோ கடற்கரைப் பக்கம் போவார்கள்.நான் அப்படிப் போகும் பழக்கமில்லாதவன்.அந்த மாதிரிப்போகும் பண்பில்லாதவன் என்னுடைய பருவமும் அதற்கு இடம் தராது.

நான் கடற்கரைப் பக்கம் வரும் பொழுது பலர் பேசிக் கொண்டிருந்தார்கள். அதில் "வேலவன் குன்றத்தைப் பிடித்து விட்டோம். இனி மாலவன் குன்றத்தையும் பிடிப்போம்." என்று, திருத்தணி தமிழகத்தோடு சேர்ந்ததை வைத்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

இரண்டு தினங்கட்கு முன்பு நான் காஞ்சீபுரத்தில் "திராவிட நாடு" இதழுக்காக நமது அடிகளின் வற்புறுத்தலின் பேரில் காலை 5—மணி வரை கட்டுரை எழுதிக் கொண்டிருந்தேன். அப்போது சிலர் கொடிகளைத் தாங்கிக் கொண்டு. கோஷங்கள் போட்டுக் கொண்டு என் தெருப் பக்கம் சுற்றி வந்தார்கள். வேலவன் குன்றம் பிடிபட்டதை நான் அறிய வேண்டும் என்பதற்காக நாலைந்து தடவை அப்படிச் சுற்றி வந்தார்களோ என்று தான் நினைக்கிறேன்.திருத்தணி தமிழகத்தோடு சேர்ந்த விழாவில் பேசிய நிதியமைச்சர் சி. சுப்ரமணியம் எனது நண்பர், மா. பொ. சிவஞானம் அவர்களை காங்கிரஸில் சேருமாறு அழைத்திருக்கிறார். மற்றும் சி. சுப்ரமணியம் பேசும் போது தெலுங்கர், தமிழர் ஒற்றுமையை வளர்ப்பதற்குசிவஞானம் அவர்கள் பாடுபட வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்- மா.பொ.சி. அவர்கள் தெலுங்கர், தமிழர் ஒற்றுமையை கெடுக்கமாட்டேனென்றும் காங்கிரஸிற்கு துரோகம் செய்யமாட்டேனென்றும் கூறியிருக்கிறார். இதிலிருந்து நமது கொள்கை வெற்றி பெற்றது என்று நான் உங்களிடம் கூற ஆசைப்படுகிறேன். திருத்தணி, தமிழகத்தோடு சேர்ந்தது சிறிய விஷயம். அதில் நாம் வேறுபடவில்லை. அதற்கு நாமும் உடனிருந்து பாடு பட்டிருக்கிறோம். மாநாடுகளிலும் கூட்டங்களிலும் தீர்மானம் செய்து அதை வற்புறுத்தி பாடுபட்டிருக்கிறோம். இந்த சீரிய பணியில் நண்பர் சிவஞானம் வெற்றி பெற்றிருக்கிறார். "வேலவன் குன்றம் பிடிப்பட்டதைவிட திராவிடநாடு குன்றம் பிடிப்பட வேண்டும். அது மிகப் பெரியது." அவர் அதில் சேர்ந்து பணியாற்ற நான் அழைப்பதுடன் அந்த வெற்றி விழாவை கொண்டாடுவதற்கு அவர் உறுதுணையாகவும் இருக்க வேண்டும்." கேரளம். கன்னடம் ஆந்திரம், தமிழகம் ஒன்றுபட்டு ஒற்றுமையாக இருந்து நாம் நமது உரிமைகளையும், வலிவையும், பெற வேண்டும் என்று நாம் கூறுவதை எனது நண்பர் மா. பொ. சி. யே ஒரு கூட்டத்தில் ஒப்புக் கொண்டு விட்டார். சினிமா நடிகர்கள் கூட்டத்தில் அவர் பேசுகிறபோது. "என் பக்கத்திலே ஒரு புறத்தில் ஆந்திர நடிகர்களும், மற்றொரு பக்கத்தில். கன்னட நடிகர்களும், கேரள நடிகர்களும், தமிழக நடிகர்களும் இருக்கிறார்கள். அதற்காக நான் பெருமை படுகிறேன் என்று சொன்னார்.

நான் பத்தாண்டுகளாகக் கூறி வந்த கொள்கைகளைச் சாதாரணமாக எண்ணி வந்தவர்கள் இன்று அதை ஒப்புக் கொள்ளும் படியான நிலை ஏற்பட்டுவிட்டது.

தமிழர் வேறு, ஆந்திரர் வேறு, கேரளத்தார் வேறு என்று கூறி வந்தவர்கள்,அவர்களை நண்பர்கள் என்று கூறும் நிலைக்கு வந்து விட்

(4-ம் பக்கம் பார்க்கவும்)



# 'வேலவர் குன்றம்' விடுதலையை விட திராவிட நாடு விடுதலையே அவசியமானது!

## அதற்காக என்னுடன் சேர ம.பொ.சியை அழைக்கிறேன்,

(அண்ணா பேச்சு)
3-ம் பக்கத் தொடர்ச்சி)

டார்கள் என்றால் அது எனக்கு வெற்றிதான்.

சட்டமன்றத்தில் பரம்பிக்குளம் தண்ணீர் விஷயமாகவும், கிருஷ்ணா பெண்ணாறு தண்ணீர் விஷயமாகவும் விவாதம் நடக்கும் போது நமது நிதி அமைச்சர் சி. சுப்பிரமணியம் உட்கார்ந்து கொண்டே ஒரு விஷயம் கூறினார்.

அது பத்திரிகையில் வராது. காரணம் அவர் உட்கார்ந்து கொண்டே என் காதில் விழும்படி கூறினார். சட்டமன்றத்தில் பேசும் பேச்சுகள் எழுந்து பேசினால் தான் வெளிவரும்.

தண்ணீர் பிரச்சினையில் இரு மாநிலங்களில் உள்ள தகராறுகளை அங்கத்தினர்கள் கூறும் போது "இது திராவிடத் தொல்லையால் தான்", கஷ்டமாக இருக்கிறதென்று கூறினார் அதாவது நாம் திராவிட நாடு என்று கூறுவதை அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லையென்றும், நாம் சொல்லும் திராவிடர் என்பதை அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை என்றும் அவர்கள் அவர்களை தனியாகவே எண்ணுகிறார்கள் என்றும் பொருள்படப் பேசினார். அதாவது, "நீ தான் அவர்களை ஒன்று சேர்க்க எண்ணுகிறாயே தவிர அவர்கள் உன்னை ஒன்றாக எண்ணவில்லை என்று சூசகமாக நிதியமைச்சர் சுப்பிரமணியம் கூறுகிறார். அவர்களுக்கு இன உணர்ச்சி வரவில்லையென்றும், அதை நாம் ஏற்படுத்தவில்லையென்றும் கூறுகிறார்.'

நான் அதை ஒப்புக் கொள்கிறேன். எங்களுக்கு இருக்கும் வாய்ப்புக் கேற்றபடி, வசதிக் கேற்றபடி, இருக்கும் நிலைக்குத் தக்கபடி செய்து தான் வருகிறோம்: அந்த உணர்ச்சி எங்கெங்கு பரவ வேண்டுமோ, யார், யார் மனதில் புகச் செய்ய வேண்டுமோ அங்கெல்லாம் புகும்படி செய்திருக்கிறோம்.

இந்த எண்ணம் எங்கும் நிலவுவதற்கான முறையிலும் வலுப் பெற்று வருகிறது.

இப்போது இருப்பதைவிட அதிகமான சலுகைகள் வசதிகள் இல்லை. அதனால் ஒரே இனம் என்ற உணர்ச்சி அதிகமாகப் பரவி அதற்கு வலுவேற்படவில்லை. இதை நான் ஏற்றுக் கொள்கிறேன். அதே போல் அவர்களையே திருப்பிக் கேட்கிறேன். நீங்கள் கூறுகிறீர்களே எங்கள் பிரச்சாரத்தால் இன உணர்ச்சி ஏற்படவில்லை என்று உங்களால் முடிந்ததா? நாங்கள் பத்தாண்டுகளாகத் தான் இந்தப் பணியைச் செய்கிறோம்,

நீங்கள் அறுபதாண்டுகளாக "அகில பாரதம்" ஏக இந்தியா என்று பிரச்சாரம் செய்து வருகிறீர்கள்.' இந்தியாவிலுள்ள அனைவரும் ஒன்று என்று கூறுகிறீர்கள் ஒற்றுமை வந்ததா? வந்திருந்தால் சென்னை மாநிலத்திலுள்ளவர்களும் 'இந்தியர்கள்' என்று எண்ணி கேரளத்திலுள்ளவர்களும், ஆந்திரத்திலுள்ளவர்களும் தண்ணீர் பிரச்னையில் ஏன் சலுகைக் காட்டக் கூடாது இந்தியா ஒரே நாடு, அதிலுள்ளவர்கள் ஒரே இனத்தார் என்று ஏன் அவர்கள் எண்ணவில்லை. ஏன் காங்கிரசார் அதை உண்டாக்கவில்லை. ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு இனமும் தனித் தனியானது என்று எண்ணுகிறதே அதை ஒரே இனம் என்று ஏன் உண்டாக்கவில்லை

காங்கிரஸ் பலம் பொருந்திய ஸ்தாபனம் அதிலுள்ளவர்கள் செல்வாக்கு படைத்தவர்கள். வசதி படைத்தவர்கள். பல ஆண்டுகள் பணியாற்றி வருகிறவர்கள். அவர்கள் கூறும் "அகில பாரதம்" "இந்தியா" என்ற உணர்ச்சியை ஏன் உண்டாக்கவில்லை.

நாங்கள் கூறுவதில் ஒன்றுபடவில்லை என்றால் நாங்கள் பத்தாண்டுகளாகத் தான் பணி செய்கிறோம். எங்களுக்கு வசதி இல்லை. நாங்கள் மிகவும் சாதாரணமானவர்கள் அன்னக்காவடிகள் செல்வாக்கற்றவர்கள். பிரச்சாரப் பலமற்றவர்கள் உங்கள் நேரு மிகவும் செல்வாக்கு படைத்தவர். பிரச்சார பலம் மிக்கவர் அகில உலகம் மதிக்கும் தன்மை படைததவர். பல பிரச்சாரபலம் கொண்டவர் அப்படி இருந்தும் ஏன் அந்த உணர்ச்சியை ஏற்படுத்தவில்லை.

அகில பாரதம், என்பது உயரமானது திராவிட நாடு பிரச்சாரம் குட்டையானது. நமது நாவலர் வளர்ந்திருக்கிறார். நான் குட்டையாக இருக்கிறேன், உயரத்தில் இருப்பதை அவரே எடுக்க முடியாதிருக்கிறார். நான் எப்படி எடுக்க முடியும் நான் எடுக்கவில்லை என்று கேலி செய்தால் என்ன அர்த்தம். எடுக்க முயற்சி செய்கிறேன். பலனும் பெற்று வருகிறேன். எங்கும் அந்த உணர்ச்சி பரவி வந்து கொண்டிருக்கிறது. ஆந்திரத்தில், கேரளத்தில், கன்னடத்திலும் கொள்கைகள் பரவி வந்து கொண்டிருக்கிறது. இந்த குறுகிய காலத்தில் எந்த விதத்தில் பரவவேண்டுமோ அந்த விதத்தில் பரவி வருகிறது.

நமது நாட்டில் சுதந்திராக் கட்சி தோன்றியதில் நமக்கு நஷ்டமில்லை லாபந்தான் அதனால் நமது வளர்ச்சி குன்றாது.

ஆந்திரத்தில் சில பேர் இந்த உணர்ச்சியோடு பேசிக் கொண்டிருந்தவர்கள்கூட, இந்த எண்ணத்தை பகிரங்கமாகச் சொன்னவர்கள்கூட ஏதோ காரணத்தால சுதந்திரக் கட்சியில் சேர்ந்திருக்கிறார்கள். இருந்தாலும் அங்கும் நமது கொள்கைகள் வளர்ந்து வருகிறது.

அங்கு நமது கிளைகளும் தோன்றுகிறது. நமது கொள்கைகள் எண்ணங்கள் அங்கும் பரவி வருகிறது. கேரளப் பகுதியில் கள்ளிக் கோட்டை கொல்லம் பகுதியில் நமது சழகம் வளர்ந்து அங்கு பிரச்சாரம் நல்ல முறையில் நடக்கிறது. நாளுக்கு நாள் நமது உணர்ச்சி, கொள்கைள் புகுந்து வருகிறது.

கன்னடப் பகுதியில் நமது நாவலர் சென்று அங்கு பிரச்சாரம் செய்து வந்திருக்கிறார். ஆகவே இந்த குறுகிய காலத்தில், அந்தப் பகுதிகளில் எவ்வளவு பரவ வேண்டுமோ அவ்வளவு பரவி வந்திருக்கிறது. அறுபது ஆண்டுகளில் காங்கிரஸ் கூறிய அகில பாரதம், ஏக இந்தியா என்பது பரவியதைவிட பத்தாண்டுகளில் திராவிட உணர்ச்சி நன்றாகப்பரவி விட்டது எனது நண்பர் சிவஞானம் கூறுவது போன்று யாரும் கேளாக்காதினராக இல்லை.

ஆந்திரத்திலும், கேரளத்திலும், கன்னடத்திலும் நமது லட்சியத்தைப் பரப்பும் ஏடுகள் வேண்டும் அந்த ஏடுகள் அந்த மாநில மொழிகளில் வர வேண்டும்.

அந்தப் பகுதிகளில் பழக்கமுள்ள படித்தவர்களும், கல்லூரி மாணவர்களும் டாக்டர்களும் வியாபாரிகளும் வசதி இருக்கும் போது அந்தப் பகுதிகளில் நமது கொள்கைகள் வளர்வதற்கான முயற்சிகள் செய்ய வேண்டும். பிரச்சாரங்கள் புரிய வேண்டும். அங்கு நமது கொள்கைகள் வலுப் பெற்று, அங்குள்ளோர்கள் உணர்ச்சி பெறும் நிலையை உண்டாக்க வேண்டும்.

வட நாட்டு சுரண்டலையும் வட நாட்டு ஆதிக்கத்தையும், வட நாட்டுக்காரர் காட்டும் பாரபட்சத்தைப் பற்றியும் இப்பொழுது எங்கும் உணர ஆரம்பித்து விட்டார்கள்.

இன்று நாம் வடநாட்டானை எதற்கும் எதிர்பார்க்கும் நிலை இருக்கிறது நமக்கு வேண்டிய நன்மைகளையும் செய்வதற்கு வட நாட்டிடம் காவடி தூக்கும் நிலை இருக்கிறது. நம்முடைய மாநிலத்தின் உரிமைகள் யாவும் வட நாட்டான் காலடியில் சிக்கி இருக்கிறது.

இதை நமது அமைச்சர்களோ, காங்கிரஸ் தலைவர்களோ உணராமல் நம்மை தாக்கி வருகிறார்கள்!

இந்த மாநில அமைச்சர்களுக்கு இந்த மாநிலத்திற்கான பணிகள் செய்வதற்கான உரிமைகள் இல்லை! எதற்கும் அவர்களிடம் கேட்டுத் தான் செய்ய வேண்டியிருக்கிறது.

இது மாற வேண்டுமென்று கூறுகிறோம்.

நாங்கள் கூறுவதை யாவரும் நன்கு உணர்ந்து பார்க்க வேண்டும்.

இந்த சேப்பாக்கம் வட்டத்தில் படித்து பட்டம் பெற்றவர்களும் நல்லறிவாளர்களும் டாக்டர்களுமிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் நாங்கள் கூறுவதைக் கவனிக்கும்படி கூறுகிறேன்! அதற்கு அவர்கள் சிந்தித்துப் பார்க்கும்படியும் கேட்டுக்கொள்கிறேன்!

நாங்கள் கூறுவதையும், மாற்றுக் கட்சிகள் கூறுவதையும் சீர் தூக்கிப் பாருங்கள். நீங்கள் நீதிபதிகள் உங்கள் முடிவை சொல்லுங்கள்,

எங்களை "அடுக்கு மொழிப் பேசி மக்களை மயக்குகிறார்கள்" அதனால் மக்கள் அவர்களைப் பின்பற்றுகிறார்கள். என்றும் சொல்லி விட்டு அவர்கள் அதைப் பின்பற்றி அடுக்கு மொழியில் பேச ஆரம்பித்தார்கள். நாம் அப்படிப் பேசுவதை நிறுத்தினோம். அதிலும் அவர்கள் வெற்றி பெற முடியவில்லை. அதற்குப் பதில் அடுக்கு மொழியை தூற்றுவதற்கு உபயோகப்படுத்தி வருகிறார்கள்.

பின் நடிகர்களை வைத்திருக்கிறார்கள்' அதனால் மக்களைச் சேர்க்கிறார்கள் என்று காங்கிரசார் நம் மீது குறை கூறினார்கள்,

நம்மைப் பார்த்து அப்படிக் கூறிய காங்கிரஸ்காரர்களோ, நடிகர்களை அருகில் அமர வைத்து ஏத்திப் புகழ்ந்து சீராட்டிப் பாலூட்டி வளர்க்கிறார்கள். அவர்கள் பின்னால் சுற்றுகிறார்கள். அவர்களை வைத்து தங்கள் கட்சியை வளர்க்க நினைக்கிறார்கள், ஆனால் அந்த நடிகர்களோ "நாங்கள் எந்த அரசியல் கட்சியையும் சார்ந்தவர்களல்ல என்று கூறுகிறார்கள்.

எந்த முறையில் அவர்களை புகழ்ந்தாலும் அவர்கள் என் பக்கம். என் கட்சியில் இருப்பார்களே ஒழிய இவர்களுடனிருக்க மாட்டார்கள்

கடையில் வால்போஸ்ட்டர்களைப் போட்டு மக்கள் மனதை மாற்றி வளர்கிறார்கள் என்று கூறினார்கள். எல்லாம் போய் இப்போது ஆபாசமாகத் தூற்ற ஆரம்பித்து விட்டார்கள்.

"அண்ணாதுரை இப்படி, நெடுஞ்செழியன இப்படி" என்று? தனிப்பட்ட முறையில் தாக்க கண்டபடி வாயில் வந்ததை வைத்து திட்ட ஆரம்பித்து விட்டார்கள்.

அது பற்றி நமக்கு கவலை இல்லை.

"திராவிட நாடு கொள்கையில் இன்ன தவறு" அதனால் தென்னகத்திற்கு இன்ன கேடுகளிருக்கிறது என்று கொள்கை

(9-ம் பக்கம் பார்க்க)

# என் இறுதி மூச்சு உள்ள வரை கழகத்தில் இருந்தே பணியாற்றுவேன்!

## பேனுமினுக்கியாக வாழ்க்கை நடத்த எண்ணுபவனல்ல நான் !

## கொள்கை தான் எனக்குப் பெரிது; பணம் எனக்கு பெரிதல்ல!

### கோகலே மண்டபத்தில் எஸ்- எஸ், ராஜேந்திரன் முழக்கம்!

சென்னை வண்ணையம்பதி பொழுது போக்கு சீர்திருத்த மன்றத்தின் சிறப்புக் கூட்டம் சென்னை கோகலே மண்டபத்தில் 3-4-60ம் நாள் காலை 10 மணிக்கு சேலம், திரு கே இராஜாராம் பி.ஏ. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஏராளமான மக்கள் நுழைவுக் கட்டணம் செலுத்தி வந்திருந்தனர்,

பொதுச் செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் எம், ஏ. தோழர்கள் நம் நாடு பொறுப்பாசிரியர் காஞ்சி கலியாண சுந்தரம் நம்நாடு துணையாசிரியர் எ.என். வேணு, தி. சு. கிள்ளிவளவன், இலட்சிய நடிகர், எஸ். எஸ். இராசேந்திரன் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் "கலையும், வாழ்வும்" என்ற பொருள் பற்றிப் பேசியதாவது :—

பேரன்புடைய தலைவர் அவர்களே! அருமை பொதுச் செயலாளர் அவர்களே!! மதிப்பிற்குரிய தோழர்களே! தாய்மார்களே!!

இன்று நடைபெறும் இந்த மாபெரும் சிறப்புக் கூட்டத்தில் எனக்கு பேசவாய்ப்பினை நல்கிய பொது நலச் சீர்திருத்த மன்றத்தினருக்கும், மதிப்பிற்குரிய பொதுச் செயலாளர் அவர்களுக்கும் எனது உளங்கனிந்த நன்றியறிதலையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு இன்று கொடுக்கப்பட்டிருக்கின்ற பொருள், 'கலையும் வாழ்வும்' என்பதாகும், 'கலையும் வாழ்வும்' என்று பிரித்துக் கூறுவதை நான் என்றும் ஒப்புக் கொள்ளாதவன். கலை இன்றி வாழ்வில்லை; வாழ்வின்றி கலை இல்லை. இரண்டும் ஒன்றோடு இணைந்ததுதான. கலையுலகில் ஈடுபட்டிருப்பவர்கள், அரசியலிலும், கட்சிகளிலும் ஈடுபாடுக் கொள்ளக் கூடாது என்றும் கலைஞர்களுக்கு—நடிகர்களுக்கு அரசியல் கூடாதென்றும் ஒரு சில கலைஞர்களும், ஒரு சில அரசியல் மேதாவிகளும் அறிவுறை கூறி வருகிறார்கள். அதையும் நான் ஒப்புக கொள்ளாதவன். கலைஞர்கள். நடிகர்கள் அரசியலுக்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல. மனிதர்களுக்கு உறுப்புகள் எவ்வாறு தேவையோ. அதேபோன்று அரசியலும், மனிதர்களுக்கு தேவைப்படுகின்றது. கடந்தகால அரசியலை ஆராய்ந்துப் பார்த்தால், பல கலைஞர்கள் அரசியலில் ஈடுபட்டிருந்திருக்கிறார்கள்.

காங்கிரஸ் வரலாற்றைப்புரட்டிப்பார்பார்களானல் காங்கிரஸ் வளர்ச்சி பெறுவதற்கும் அது வலுவடைவதற்கும் பல நடிகர்களும், கலைஞாகளும் பாடுபட்டு வந்திருக்கிறார்கள்'

நாடக உலகில் மிகச் சிறப்புப் பெற்று விளங்கிய, காலஞ்சென்ற திரு எஸ், எஸ். விசுவநாத தாஸ் அவர்களும், சென்னை மேல்சபை உறுப்பினராக இருந்து வரும். திருமதி கே. பி. சுந்தராம்பாள் அவர்களும், இந்த நாடு ஆங்கிலேயனிடமிருந்து விடுதலைப்பெறுவதற்காக அரும்பாடுபட்டு உழைத்திருக்கிறார்கள். காலம் சென்ற விசுவநாத தாஸ் பல இன்னல்களுக்கு ஆளாகி, சிறைக்கும் சென்றிருக்கிறார். அப்படியெல்லாம் இருந்திருக்கும் போது ஏன் கலைஞர்கள்—நடிகர்கள் அரசியலிலும். கட்சியிலும், பங்குக் கொள்ளக் கூடாதுஎன்று இப்போது கூறுகிறார்கள் என்று எனக்கு விளங்கவில்லை.

சமீபகாலமாக திராவிட முன்னேற்றக் கழகத்தில் பல கலைஞர்களும், நடிகர்களும் பங்கு கொண்டு மிக நல்ல முறையில் உழைத்து வருவதைக் கண்டும் அதனல் மக்கள் உணர்ச்சி பெறுவதைக் கண்டும் சிலர் அதைக் கண்டு சகியாது அரசியலில் கலைஞர்கள் பங்கு கொள்ளக் கூடாது என்கின்றனர்.

நாட்டின் விடுதலைக்காகவும், மக்களின் நல்வாழ்விற்காகவும், கலைஞர்கள் பாடுபடக் கூடாதா? அவர்களுக்கு அந்த உரிமை கிடையாதா? அதை நான் அறிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்,

திராவிட முன்னேற்றக் கழகத்தில் நானும், எனது மதிப்பிற்குரிய அண்ணன் எம், ஜி. ராமச்சந்திரனும், எனது இன்னெரு அண்ணனை கே. ஆர். ராமசாமியும், நண்பர் டி. வி. நாராயணசாமியும் ஈடுபட்டு பணியாற்றி வருவதால் நாங்கள் நடத்தும் நாடகங்களையும், நாங்கள் பொறுப் பேற்று நடத்தும். தென்னிந்திய நடிகர் சங்கத்தினையும். கழகக் கண்ணேட்டத்தேடு நடத்துகிறோம். என்று பேசி வருகிறார்கள். அதற்காக நாங்கள் பெருமைப்படுகிறோம்

திராவிட முன்னேற்றக் கழகமும், அதன் கொள்கைகளும் என்னுடைய இரத்தத்தோடு இணைந்தது. எனது நன் மதிப்பிற்குரிய தலைவரும் அறிஞர் அண்ணா அவர்கள்; இதை நான் எங்கும் மறைத்துப் பேசவோ மறுக்கவோ மாட்டேன்.

ஒரு சில கலைஞர்கள் கூறிக் கொள்கிறார்கள். நடிகன் அரசியலில் ஈடுபட வேண்டாம் அவனுக்கு கட்சித் தேவை இல்லை, என்று கூறி வருகிறார்கள். ஒரு சில தினங்களுக்கு முன்பு எனது அண்ணன் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் பத்திரிகை நிருபர்கள் மகாநாடொன்று நடத்தினர். அந்த மாட்டிற்கு நானும்

(6-ம் பக்கம் பார்க்கவும்)



# திராவிட முன்னேற்றக் கழகத்தான் என்று சொல்லுவதில்தான் எனக்குத் தனிப் பெருமை உண்டு !

(இராஜேந்திரன் பேச்சு)
(5-ம் பக்கத தொடர்ச்சி)

எனது அண்ணன் கே, ஆர் ராமசாமியும், சிறந்த டைரகடரான ஏ, எஸ். சாமி அவர்களும். நடிகை எம். என். ராஜம் அவர்களும் விசேட அழைப்பினராகச் சென்றிருந்தோம்,

விசேட விருந்தினர்களாகச் செல்டவர்களை பத்திரிகை நிருபர்கள் பல கேள்விகள் கேட்பார்கள். அந்த முறையில் எங்களையும் கேள்விகள் கேட்டார்கள்.

முதலில் ஒரு நிருபர் திருமதி எம். என். ராஜம் அவர்களை கேள்வி கேடகும் போது, "குடும்பப் பெண்கள் சினிமாப் படத்தில் நடிக்கலாமா" என்ற கேள்வி கேட்டார். அதற்கு அந்த அம்மாள் தக்க பதிலளித்தாள்.

புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் முதலில் பேசும் போது கலைஞர்கள் மனம் புண்படும் படியான கேள்விகளைக கேட்கக் கூடாதென்று கேட்டுக் கொண்டார்,

என்னை ஒரு நிருபர் கேள்வி கேட்ட போது. கலைஞர்களுக்கு—நடிகர்களுக்கு அரசியல் தேவையா? அவர்கள் கட்சிகளில் பங்கு கொள்ளலாமா என்று கேட்டார். நான் சொன்னேன், கலைஞர்களுக்கு—நடிகர்களுக்கு அரசியல் முக்கியம் தேவை அரசியல் தான் அவனது ஜீவாதாரம் என்று கூறினேன். பின் அந்தப் பத்திரிகை நிருபர் என்னைக் கேட்டார். நீங்கள் ஒரு நடிகராக இருந்து கட்சிகளில் பங்கு கொண்டிருந்தால், மற்றவர்கள் உங்களை தொழிலில் அழுத்துவார்களே! பத்திரிகைகள் உங்களைத் தாககுமே! இதனால் உங்களுக்கு வீழ்ச்சி ஏற்படுமே என்று கேட்டார். நான் அதற்கு சாட்டைக் கொடுப்பது போல சொன்னேன். தாக்குபவர்கள், தாக்கட்டும்; அழுத்துபவர்கள் அழுத்தட்டும். நான் அதனால் எல்லாம் அழிந்துவிட மாட்டேன். கொள்கையே எனக்கு உயிர் போன்றது, எனக்கு கொள்கை பெரிதேயல்லாது, புகழ் பெரிதல்ல, என்னைப் பொறுத்த வரையில் நான் 'பராசக்தி" படததில் நடித்ததால் கொள்கைக்காரனாக வந்தவனல்ல. நான் எட்டு வயது சிறுவனாக இருந்த பொழுது திருடி. கே.எஸ்.சகோதரர்களின் நாடக கம்பெனியில் நான் பால நடிகனாகச் சேர்ந்தேன். "அன்று முதலே நான் பெரியாரின் தொண்டனாக இருநதேன், பின்னர் சுயமரியாதைக் காரனானேன். ஜஸடிஸ் கட்சி தொண்டனானேன். பெரியார் தலைமையில் திராவிட கழகத்திலிருந்தேன். இன்று அறிஞர் அண்ணா தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் முழுத் தொண்டனாகத் திகழ்கிறேன்,"

"இராசேந்திரன் பிளாட்பாரததில் சுற்றிக கொண்டிருந்த போதும கொள்கைகாரன்தான். இன்று மாட மாளிகை—காரில சுற்றிக் கொண்டிருக்கும் போதும் கொள்கைககாரன் தான்!!

சினிமாப் படத்தில் நடித்ததனால் நான் பெரிய மனிதனாகிவிட வில்லை. கட்சியில் சேர்ந்த பின்புதான்—கட்சிககாரன் என்று தெரிந்த பின்புதான் எனக்கு பராசக்தியில் நடிக்க வாய்புக் கிடைத்தது. அதேபோன்று குலதெய்வத்தில் நடிக்கும் பேறு பெற்றேன். நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெறி பிடித்த தொண்டன், என்று தெரிந்த பின்புதான எம். ஏ. வேணு என்னை 'முதலாளி' படத்தில் நடிக்க அழைத்தார். ஆகவே, என்னை யாராலும் அழிக்க முடியாது. ஒழிக்க முடியாது.

இன்னும் ஒன்று உங்களிடம் கூற ஆசைப்படுகிறேன் அதைக் கூறினல் உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். நான் சாதாரண ராஜேந்திரனச, கையில் ஒரு ரூபாய்கூட இல்லாமல் சாப்பாட்டிற்கே திண்டாடிக் கொண்டிருந்தேன். நூறு ரூபாய் நோட்டு எப்படி இருக்கும் என்று எனக்கு தெரியாது. இப்படி இருக்கின்ற நிலைமையில் நணபர் வேணு இராமாயணத்தை சினிமாப் படபெடுக்க ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்.

"நான் டி. கே.எஸ். நாடக கம்பெனியில் 'இராமயணத்'தில் பரதனாக நடித்துக் கொண்டிருநதேன்" எனது அருமை நண்பர் ஏ. பி, நாகராஜன் சீதையாக நடித்துக் கொண்டிருந்தார். இராமயணப் படத்திலும், நான் பரதனாக நடிக்க வேண்டுமென்று, எனது நண்பர்கள் நாகராஜன், வேணு ஆகியவர்கள் ஆசைப்பட்டார்கள் என்னையும வந்து கேட்டார்கள் நான் புராணப் படத்தில் நடிக்க முடியாது என்று மறுத்து விட்டேன். எனக்குப் பணம் பெரியதென்று நினைத்திருந்தால்—புகழ் பெரியதென்று நினைத்திருந்தால், அன்று இராமயணப் படத்தில் நடித்திருப்பேன்.

"நான் கொள்கை பெரிதென்றே நினைத்தேன். கொள்கையே என் உயிரென மதித்தேன், அதனால் பரதனாக நடிக்கச் சம்மதிக்க வில்லை.

தமிழரசுக் கழகத்தில் முக்கிய பணியாற்றி வருபவரும், எனதருமை நண்பருமான கவி. கா. மு, ஷெரீப் அவர்கள் என்னைப் பார்த்து "நீங்கள் பரதனாகத்தானே நடிககப் போகிறீர்கள் உங்களுக்குப் பிரியமான—நீங்கள் அன்போடு உச்சரிக்கும் "அண்ணா, அண்ணா" என்று தானே கூப்பிடப் போகிறீர்கள் இதில நீங்கள் அவசியம் நடிக்க வேணடுமென்று கூறினர்.

நான் கண்டிப்பாக முடியாது அது என் கொள்கைக்கும புறம்பானது என்று கூறி மறுத்து விட்டேன்,

உடனே ஷெரீப் கூறினர், இந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நடிகர்கள்தான் தங்கள் கொள்கைக் குபுறம்பான பாகங்களில் நடிகக மறுக்கிறார்கள் அவர்களைப் பாராட்ட வேண்டும்" என்று கூறினர்.

என்னைப் பொறுத்தவரை நான் எதெதில் கலந்து கொள்கிறேனே, எந்தெந்தக்கூட்டங்களில்பேசவேண்டிய நிலை ஏற்படுகிறதோ அங்கு நான் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவன் என்று கூறுவதற்குத் தயங்கமாட்டேன். அது அமைச்சர்கள் கலந்து கொள்ளும் கூட்டமானலும் சரி அரசியல் தலைவர்கள் கூடியிருக்கிற கூட்டமானலும் சரி, அங்கு பேசுவதற்கு முன் நான் "திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவன்"என்று ஆரம்பித்துத்தான் பேசுவேன் அது பற்றி நான் கவலைப் படமாட்டேன். அதைக் கூறுவதில் மிகப் பெருமை கொள்வேன்,

நானும் எனதாருயிர் நண்பர் சிவாஜி கணேசனும் நாடகக் கம்பெனிகளில் நடித்துக் கொண்டிருக்கும் போது ஒன்றாகவே இருப்போம்.

கடற்கரைப் பக்கம் நடந்து கொண்டே போவோம் திராவிடர் இயக்கதைப் பற்றியும் திராவிட நாட்டைப் பற்றியும் பேசிக் கொண்டிருப்போம். அவர் திராவிட நாட்டுக் கொள்கைகளை ஒப்புக் கொண்டு பேசுவார், திராவிடநாடு விடுதலை அடைய வேண்டுமென்பதில் அவர் ஆர்வம் காட்டி வருவார்.

இன்று நான் மாளிகையில் வசிக்கிறேன். ஒப்புக் கொள்கிறேன், காரில் செல்கிறேன் ஒப்புக கொள்கிறேன்,

கொள்கை பேசி வருவதால் இந்த மாடமாளிகையும் காரும் இல்லாது போகும் நிலை ஏற்பட்டால் அதைப் பற்றிக் கவலைப்படமாட்டேன். பழைய பிளாட்பாரம் நிலை வந்தாலும் அதைப் பொருட படுத்த மாட்டேன்.

இதுவரை மாளிகை, கார் இவைகளைக் சனவு கண்டதாக எண்ணிக் கொள்வேன். இடையில் வந்த நிலை மாறிவிட்டதை நினைத்து வருந்த மாட்டேன்.

என் நாட்டுக்காகவும், என் நாட்டு மக்களுக்காகவும் பணியாற்றி வருவேன், அதற்காக எந்த இன்னல் வந்தாலும் ஏற்பேன!

நான் மேனமினிக்கியாக இருந்து வாழ வேணடுமென்று நினைப்பவனல்ல. எனது இன்பத் திராவிட நாடு பிரிந்து இங்குள்ளோர் இனிது வாழ வேண்டுமென்று எண்ணுபவன நான்! கட்சிக்கும் கட்சித் தலைவனுக்கும் கட்டுப்பட்டிருப்பவன் நான்.

கட்சிக் கொள்கைகளை உயிரை விட மேலாக மதிப்பவன் நான்!

சென்றபொதுத்தேர்தலின் போது தேனித் தொகுதியில் நான் தேர்தலில் நிற்க வேண்டு மென்று நமது பொதுச் செயலாளர் கட்டளையிட்டார் மகிழ்வுடன் ஏற்றேன்,

தேனி என்றல் காட்டுப் பிரதேசம், ரோட்டு வசதியில்லாத இடம் மற்றும் மோசமான பகுதி அந்த இடத்தில் தேர்தலுக்கு நிற்கும்படி கட்டளையிட்டார். நின்றேன் தேனியைப்பற்றி இன்னும் ஒரு செய்தியை நினைவுப்படுத்த எண்ணுகிறேன். பல, ஆண்டுகளுக்கு முன் அந்தத் தேனியில தான். நமது சமுகக் காவலராம் நாவலர் அவர்களின் உயிரைக் குடித்து சமாதி வைக்க எண்ணிய "நல்லவர்கள்" வாழும் பகுதி. அந்தப் பகுதியில் தான் நான் தேர்தலில் நின்றேன்! கழகம் ஆணை பிறபித்தது! அதை ஏற்றேன்! எப்படி ஏற்றேன் மகிழ்வுடன் ஏற்றேன்.

(7-ம் பக்கம் பார்க்கவும்)

# சினிமாவில் நடிப்பதால் எனக்குப் புகழ் வரவில்லை; கட்சியிலிருப்பாதாலேயே புகழ் வந்தது !

(ராஜேந்திரன் பேச்சு)

(6–ம் பக்கத் தொடர்ச்சி)

சினிமாவில் ஒரு கொடும் புலியுடன் சண்டை போடும் பணியான வகையில் நடிக்க வேண்டுமென்று கூறியிருந்தாலும் பயப்பட்டிருபேன். தேர்தலில் “நில்” என்று உத்திரவு வந்ததும் மகிழ்வுடன் நின்றேன். நல்ல வோட்டுகள் பெற்றேன்.

நான் தேர்லில் நின்றதும் “ராஜேந்திரன் ஒழிந்தான் அவன் இதோடு சரி டெபாஷிட்” கூட வாங்க மாட்டான் என்றார்கள். அவர்கள் எண்ணம் பொய்யாகியது. தேர்தலுக்கு பின் தான் வளர்ந்தேன். பல படங்களில் நடிக்கும் வாய்ப்பும் கிடைத்தது.

எனது ஒப்பற்ற தலைவர் அறிஞர் அண்ணா அவர்களும் பொதுச் செயலாளர் நாவலர் அவர்களும் எனக்கு எந்தக் கட்டளையிட்டாலும் அதைஉவப்புடன் ஏற்பேன்

நீங்களெல்லாம் ஒரு செய்தியை அறிந்திருக்க மாட்டீர்கள். இதைச் சொல்லும் போதே உங்களுக்கு மனம் வேதனை தரும்!

தேனியில் நடைபெற்ற தேர்தல தினத்தன்று நானும் மதுரை முத்துவும் ஓட்டுச் சாவடிகளைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வந்தோம். அப்போது எங்களைப் பின் தொடர்ந்து ஒருவன் வந்து கொணடிருந்தான்! அவனை மதுரை முத்து அவர்கள் பிடித்துப் பார்க்கும் போது அவனிடம் நீண்ட பிச்சுவா இருந்தது கொஞ்சம் ஏமாந்திருந்தால் என் பெயர் இன்று நமது கழகத்தின் தியாகிகளின் பட்டியலில் சேர்ந்திருக்கும் நமது கழகத்தை சினிமாக்காரர்கள் கட்சி என்று ஆளுங் கட்சியினர் கூறினார்கள். இன்று ஆளுங் கட்சியைச் சார்ந்த அமைச்சர்களும் தலைவர்களும் நண்பர் சிவாஜி கணேசனுக்கு ஆலவட்டம போட்டுக் கொண்டு அவர் பின்னாலே சுற்றி வருகிறார்கள், அவர் தன்னை எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவனலல என்று கூறினாலும் அவருக்குக் கதர் சட்டையை மாட்டி, காளை மாட்டுச் சின்னம் கொடுத்து சட்ட மன்றத் தேர்தலில் நிறுத்தி வைப்பதற்கான வேலைகளைக் காங்கிரஸ் தலைவர்கள் செய்து வருகிறார்கள்.

இன்று சென்னையில் எங்கு பார்த்தாலும் நம்மையும் நமது தலைவர்களையும், நமது கழகத்தையும் தகாத முறையில் வாயில் உச்சரிகக்த் தகுதியற்ற வார்த்தைகளைப் பேசுகிறார்கள். சமீபத்தில் தேனாம்பேட்டையில் எனது வீட்டிற்குப் பக்கத்தில் காங்கிரஸ்காரர்கள் ஒரு கூட்டத்தைப் போட்டார்கள் அதில் நமது, அறிஞர் அண்ணா அவர்களையும், நாவலர் அவர்களையும் அண்ணன் எம். ஜி. ஆர். அவர்களையும், என்னையும் ‘வாடா’ போடா என்றும் குடும்பங்களைப் பற்றியும் கேட்க முடியாத அளவுக்குப் பேசினார்கள்!

இந்த நாட்டில் நல்ல தமிழில் மேடையில பேசுவதற்கு வழி காட்டியாக திராவிட முன்னேற்றக் கழகம் இருந்து வருகிறது!

அந்தக் கழகத்தை அழகு தமிழ் மொழியில் நம்மையே ஆபாசமாகப் பேசுகிறார்கள் அதுவும் அமைச்சர்கள் முன்னிலையிலேயே பேசுகிறார்கள்!

தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் திரு ஓ. வி. அழகேசனும் பல சில்லரைகளும், சந்துமுனைகளும் நம்மைத் தாககி பேசி வருகிறார்கள். இதையெல்லாம வைத்து நாம் ஆத்திரப்படக் கூடாது! அதைக் கண்டு கவலைப்படக் கூடாது பேசுகின்றவர்களெல்லாம் பேசட்டும், திட்டுபவர்களெல்லாம் திட்டட்டும், வளர்வோம் வளர்கிறோம்!

இப்படியெல்லாம் திட்டினால் நமக்கு ஆத்திரம் வரும் அதனால் குழப்பம் ஏற்பட்டால் அதை வைத்து நம்மையும், நமது கழகத்தையும் ஒழித்து விடலாம் என்று காங்கிரஸ் தலைவர்கள் திட்டம் போட்டிருக்கிறார்கள்,

ஆகவே நமது மூலாதாரக் கொள்கையான கடமையையும் கண்ணியத்தையும், கட்டுப்பாட்டையும் கடைப்பிடித்து, நம்மை எதையும தாககும் இதயமாக்கிக் கொள்ள வேண்டும்”

சமீபத்தில் நான் ஒரு பத்திரிகையைப் பார்த்தேன். அதில் “ராஜேந்திரனுக்கு கழகத்திலிருந்து கல்த்தா” என்றும் ராஜேந்திரன் கட்சியிலிருந்து விலகுகிறார் என்றும் இன்னும் பலவிதமான கருத்துடன் செய்திகளை வெளியிட்டிருக்கிறது!

அவர்களுக்கு உறுதியாகக் கூறுகிறேன்! “யார் விலகினாலும் சரி, எப்படித் தலைவர்கள் விலகினாலும் சரி, ராஜேந்திரன் கட்சியிலிருந்து விலக மாட்டான். அவன் கடைசி மூச்சு இருக்கும் வரை கட்சிக் கொள்கைகளைத் தாங்கிக் கொண்டேதான் இருப்பான் அவனது கடைசி மூச்சு இருக்கும் போது கூட மனைவி, மக்கள் என்று கூறுவதை விட்டு கொள்கை கொள்கை எனற அந்த இரண்டு சொற்களைக் கூறியே இறப்பான்!

ராஜேந்திரன் காங்கிரசுக்குப் போனாலும் அவனைச் சேர்க்க மாட்டார்கள் அவன் கொள்கை உரம் பெற்றவன் அவன் அங்கும் தனது கொள்கைகளைப் பரப்பவே முயலைசி செய்வான் ஆகவே மாற்றார் என்னைத் தவறாகப் புரிந்து கொள்ள வேண்டாமென்று கூறிக் கொள்கிறேன்.

நான் திருப்பதிக்கு கோவிலுசகுச் சென்றாலும் நான் கலைகளை கண்டு ரசிக்க வந்திருக்கிறேன் என்று கூறுவார்கள். மதுரைக்கு மீனாட்சியம்மன் கோவிலுக்குள் சென்றாலும் நான் சிற்பங்களைக் கண்டு மகிழ வந்துள்ளேன்: என்று கூறுவார்கள் நான் பக்தியோடு கோவிலுக்கு வந்தேன் என்று யாரும் கூற மாட்டார்கள் எனக்குள்ள கொள்கைப்பிடிப்பை யாவரும் அறிவார்கள். எனவே நான் கட்சியிலிருந்து விலகுகிறேன் என்று கூறுவதை யாரும் நம்ப மாட்டார்கள்.

நான் இவ்வளவு நேரம் எனது சொற்பொழிவை பொறுமையுடன் கேட்டு கொண்டிருந்தமைக்காக உங்கட்கெல்லாம் எனது மனமுவந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டு விடை பெறுகிறேன்.

●

## எனக்குப் பிடித்த தலைவர் அறிஞர் அண்ணா !

## திராவிட நாடு பெறுவதே எனது லட்சியம் !

### வளையாபதி முத்துகிருஷ்ணன் விளக்கம்!

பல படங்களில் நடித்து புகழ் பெற்று விளங்கும் சிறந்த நடிகரான வளையாபதி முத்துகிருஷ்ணன் அவர் கீழ்க்கண்ட கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்,

“நான் இனத்தால் திராவிடன், மொழியால் தமிழன் என்னுடைய மூலாதார லட்சியம் திராவிட நாடு திராவிடருக்கு ஆவது தான், அதற்காக நான் முழுமூச்சுடன் பாடுபடுவேன். என்னுடைய ஒப்பில்லாத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் தான். அவர் வழியைப் பின்பற்றி நடப்பேன். தமிழகத்தில் வந்த படங்களில் எனக்குப் பிடித்தமான ஒரு படம் இருக்கிறதென்றால் அறிஞர் அண்ணா அவர்களால் தீட்டப்பட்ட நல்லத் தம்பி படம் தான்.

நான் வைதீகத்தை வெறுப்பவன். எனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. என் திருமணத்தைச் சீர்திருத்த முறையில் நடத்துவேன்.

புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனும், நடிகர் திலகம் சிவாஜி கணேசனும் நண்பர்களாவே இருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதப் பகையுமில்லை. சிலக் கூலிப் பத்திரிகைகள் தங்கள் வயிற்றுப் பிழைப்புக்காக இவ்வாறு கயிறு திரித்து வாழ்கின்றன.

நான் கலையையும் அரசியலையும் ஒன்றாகவே நினைப்பவன்! இரண்டும் வெவ்வேறு என்று எண்ணாதவன். அல்ல நான் திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பத்திலிருந்தே பங்கு கொண்டு வந்திருக்கிறேன்!

# தம்பி கணேசனை பாராட்டும் உரிமை பெற்றவன் நான் ஒருவன் தான்!



## நடிகர் சங்க பாராட்டு விழாவில் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். பாராட்டுரை!

ஆசிய-ஆப்பிரிக்க திரைப்பட விழாவில் விருதுகள் பெற்றுத் திரும்பிய நடிகர் திலகம் சிவாஜி கணேசன், டைரக்டர் பி ஆர். பந்துலு, நடிகைகள், பத்மினி, ராகினி இவர்களைப் பாராட்டுவதற்காக, தென்னிந்திய நடிகர் சங்கம், சென்னை தேனாம்பேட்டை ஆபீட்ஸ்பரி அரங்கில் 3-4-60ம் நாள், ஒரு பாராட்டுக் கூட்டம் நடத்தியது.

இறுதியாகப் பாராட்டிப்பேசிய புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் பேசியதாவது :—

அன்புள்ள தலைவர் அவர்களே! கலைஞர்களே!! பெரியோர்களே! தாய்மார்களே!! இன்று தென்னிந்திய நடிகர் சங்கத்தின் சார்பில் நடைபெறும் இந்த பாராட்டுக் கூட்டத்தில் எனக்குப்பேசுவதற்கு வாய்ப்புக் கிடைத்தமைக்கு எனது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு முன் பேசிய பலர் மேல் நாடு சென்று திரும்பிய கலைஞர்களைப் பாராட்டிப்பேசினார்கள். அவர்களைப் பாராட்டிப் பேசுவதற்கு முன்பு அவர்கள் முன்-எந்த நிலையில் இருந்தார்களென்றும்—எப்படி இந்த நிலைமைக்கு வந்தார்களென்றும் நாம் சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டும். பட இயக்குநர் பி. ஆர். பந்துலு இன்று இந்த நிலையை அடைவதற்கு என்னென்ன பாடுபட்டிருப்பார்! அவருக்கு என்னென்ன இடையூறுகள் ஏற்பட்டிருக்கும்! அவர் இந்த நிலைமையை அடைவதற்கு எவ்வளவு எதிர்ப்புகள் ஏற்பட்டிருக்கும் என்பதையும் நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்!

ஒருவர் புகழைப் பாராட்டுவதற்கு முன்பு அவருடைய பழங்கணக்கையும், அவர் இந்த புகழ் அடைவதற்கு அவர்பட்ட தீராத் துயரங்களையும்—கண் கலங்கியதையும் இன்று பெற்றுள்ள நிலைமையையும் தெரிந்து கொள்ள வேண்டும். அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை கூறியது போன்று "ஒருவரை பாராட்டி புகழ்வதற்கு முன்பு அவரது பழைய நிலைமையைக் கூறி அவர்களது இன்றைய புகழையும், புகழடைந்தமைக்குரிய காரணங்களையும் எடுத்துக் கூற வேண்டும். அப்போது தான் அவர்கள் வாழ்க்கையில் தவறாது இருக்க முடியும்.

ஜி. ராமநாதன் தகுதியும், திறமையும் கொண்ட ஓர் இசையமைப்பாளர், அவர் வாழ்வில் எவ்வளவோ கஷ்ட நஷ்டங்கள் பட்டவர். அவரை சில பத்திரிகைகள் இழித்தும், குறைத்தும், பழித்தும் எழுதி வந்தன. இசையமைப்பு சரியில்லை யென்றும் கூறி வந்த பத்திரிகைகள் இன்று புகழ்கிறது."

எனது நண்பர் கணேசனை—இல்லை நண்பர் என்று சொல்வது சரியில்லை. தம்பி என்று சொல்லுவது தான் சரி. தம்பி கணேசனை சிறந்த நடிகரென்பதற்காகவும், அயல் நாடு சென்று புகழ் பெற்றமைக்காகவும் பலர் பாராட்டிப் பேசினார்கள். தம்பி கணேசன் அடைந்த புகழைக் கண்டு நான் பெரு மகிழ்ச்சி யடைகிறேன். அவர் அடைந்த புகழ் தென்னிந்திய நடிகர் சங்கத்திற்கும்—கலைஞர்களாகிய எங்களுக்கும் உரியதாகும். எனது நண்பர் டி. வி. நாராயணசாமி பேசும் போது கணேசன் அடைந்த புகழும் பெருமையும் அவரைப் பெற்றெடுத்துச் சீராட்டி வளர்த்தராஜாமணியம்மாளையே சாரும் என்று கூறினார்.

தம்பி கணேசனும் நானும் நீண்ட நாள் ஒன்றாகவே இருந்து ஒரே தாயின் பிள்ளைகளாக இருந்து வந்தோம்! கணேசன் மறந்திருக்க மாட்டார் என நினைக்கிறேன்! 147, பிராட்வேயில் தம்பி கணேசனும் நானும் என்னுடைய தாயின் கையால் உணவு வாங்கி சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். நான் அவருடைய அண்ணன் கணேசன் என்னுடைய தம்பி. தம்பி கணேசனை கண்டித்து சில விஷயங்களில் கூறியும் இருக்கிறேன். அவர் சிறந்த நடிகர் என்பதில் எங்களுக்கு எப்போதுமே சந்தேக மேற்பட்டது கிடையாது. அவர் இதை விட இன்னும் அதிகமான புகழை அடைவார் என்பதிலும் எங்களுக்கு ஐயமில்லை. அவரை இப்போது யார் யார் எந்த நோக்கோடு புகழ்ந்தாலும் புகழ வேண்டிய உரிமையைப் பெற்றவன் மற்றவர்கள் புகழ்வதைப் பற்றி நான் தடைகூறவில்லை. நான் ஆனாலும் அவரது புகழிலும் வெற்றியிலும் பெருமையடைய வேண்டியவன் நான் ஒருவன் தான். நான் சில ஆண்டுகளாக முன் கூண்டுக்கிளியில் நடித்துக் கொண்டிருக்கும் போது என் விரலில் தென்னிந்திய நடிகர் சங்கத்தின் முத்திரையிட்ட மோதிரத்தை நான் போட்டிருந்தேன். அவர் அதை விரும்பினார் அவருக்கு இன்று எனது மகிச்சியை தெரிவிக்கும் முறையில் அதே மாதிரி மோதிரம் அணிவிக்கிறேன் அவர் நீண்ட புகழும் நல்வாழ்வும் வாழ ஆசைபபடுகிறேன்.

★

# தேர்தலில் தோற்றதால் கட்சியின் செல்வாக்குக் குறையாது!

## கட்சியின் பல நோக்கங்களில் தேர்தலுமொன்று !

(அண்ணு பேச்சு)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

களை மறுத்துப் பேசினுல் நாம் பயப்படலாம். அதை விட்டு தூற்றிக் கொண்டு நம்மை எதிர்த்தால் அதனுல் நமக்கு ஒரு பாதகமும் ஏற்படாது.

அரசியலில் இருக்கின்ற ஒருவனை எதிர்ப்பதற்கோ, அவனுக்குக் கெட்ட பெயர் வாங்கிக் கொடுப்பதற்கோ, மக்களிடம் செல்வாக்கைக் குறைப்பதற்கோ ஒருவன் நினைத்தால் மூன்று விதமான குற்றச் சாட்டுகள் சொன்னுல் போதுமானது.

ஒன்று பொதுப் பணத்தைத் திருடுகிருன் என்றோ, மற்ருென்று பதவி ஆசை பிடித்துத் திரிகிருனென்றோ பெண் பித்துப்பிடித்துத் திரிகிருனென்றோ கூறினுல் போதுமானது அந்த மாதிரி எங்களைப் பற்றிக் கூறுவதில்லை கொள்கையில் தவறும் காணுவதில்லை. அதை விட்டு சதாதிட்டுவதென்று புறப்பட்டால் அது யாருக்கு லாபம்.

முன்னுல் சொன்ஞர்கள் இவன் சின்னவன் அரும்பு மீசைக்காரன் இவனுக்கு என்ன அரசியல் தெரியுமென்று பின்னர் கூறினுர்கள். அண்ணுதுரை தலை நரைத்து விட்டதென்றும் கூறிப் பழித்தார்கள் இதனுல் எனக்கு ஒன்றும் கெட்டு விடவில்லை!

காங்கிரஸ்காரர்களின் உள்ளத்தைத்தான் மக்கள் உணர்ந்து கொண்டார்கள். அதற்கு பிறகு நான் எழுதிய ரோமாபுரி ராணியைப் பற்றிக் கூறி என்னைத் தாக்கினுர்கள்,

"ஐயோ பார்த்தீர்களா இந்த அண்ணுதுரை, ரோமாபுரி ராணியை எழுதி மக்கள் மனதைக் கெடுக்கிருர், ஆபாசமாக எழுதுகிருர் இபபடி எழுதி வாலிபர்களைத் தம் பக்கம் சேர்க்கிருரே' என்று மக்களிடை பேசி வந்தார்கள்,

ரோமாபுரி ராணி புத்தகத்தை நான் எழுதினேன். உண்மையில் உங்களிடம் கூறுகிறேன். இப்போது எனக்கு ஞாபகம் இல்லை அதில் என்ன எழுதியிருக்கிறன் என்று! அது ஆபாசமென்று கூறுகிறவர்கள் அதிலுள்ளதை எடுதது அங்க அங்கமாக விமர்சித்துப் பேசி புத்தகம் வெளியிட்டவர்களுக்கு அதிகப் பிரதிகள் விற்க வசதி செய்தார்களே ஒழிய அதனுல் எனக்கோ, கழகத்திற்கோ ஒரு வித கெடுதலும் விளைவித்து விடவில்லை. ஒவ்வொரு காங்கரஸ்காரரும் பல முறை படித்துப் படித்து ரசித்து விட்டு வெளியில் வந்து ஆபாசமென்று கூறி இழித்துப் பேசுகிருர்கள். ஆபாச மென்ருல் நீ ஏன் படிக்கிருய் விட்டுவிடு, அல்லது அதிலுள்ள தவறைக் கூறு.

நான் என்ன அந்த ஒரு புத்தகத்தைத் தானு எழுதியிருக்கிறேன். ஏன் அந்த ஒரு புத்தகத்தை வைத்தே பேசுகிருய் நான் இன்று கூறுகிறேன் "பணத்தோட்டம்" என்ற புத்தகம் ஒன்றை எழுதியுள்ளேன், அதை வாங்கிப் படியுங்கள் இங்கிருக்கும் பணத்தோட்டம் எப்படி அழிகிறது என்று ஆதாரங்களோடு விளக்கம் தந்துள்ளேன், அதைப் படித்து அதைப் பற்றிக் கூறை கூளுங்களேன். அது உங்களுக்கு சுலபத்தில் புரியாது. நீங்கள் புரிந்து கொள்ளவும் முடியாது. இந்த நாட்டிலுள்ள பாங்க், இன்சூரன்ஸ், மற்றுமுள்ள தொழிற் ஸ்தாபனங்களும் எப்படி மற்ற நாட்டாருக்கு உபயோகப்படுகிறது, இங்கு மற்றவர்கள் எப்படி வேட்டைக் காடாக்கிருர்கள் என்று விளக்கம் தந்துள்ளேன் பொருளாதாரத் துறையில் நம் நாடு எப்படி இருக்கிறது என்று கூறியிருக்கிறேன். அதைப் படிப்பதை விட்டு விட்டு "ரோமாபுரி ராணி"யை ஏன் படிக்கிருய்?

இன்னும் உங்களுக்கு சில யோசனைகளைச் சொல்லுகிறேன். "பணத் தோட்டதை" நீங்கள் முழுவதும் தொடர்ந்து படிக்காதிர்கள். இரவு காலங்களில் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்து விட்டு நிம்மதியாக பத்துப் பத்து பக்கங்களாகப் படியுங்கள் காலை நேரங்களில் பூஜை செய்து விட்டுப் படியுங்கள். அப்பொழுது தான் உங்களால் ஜீரணிக்க முடியும் பக்கம், பக்கமாக இரண்டு மணி நேரம் படித்து பொருளை விளங்கிக் கொண்டு பின் மற்றதைப் படியுங்கள் ஏனெனில் அதில் புள்ளி விவரங்கள், பல ஆதாரங்கள் இருக்கிறது. அம்மாதிரி படித்தால் தான் உங்களால் புரிந்து கொள்ள முடியும்! ஆகவே சில்லரை விஷயங்களை வைத்து எங்களைத் தாக்கி அழித்து விடலாம் என்று நினைத்தால் அது பயன் தராது.

இன்னும் தூற்றுகிறவர்கள் நாம் தேர்தல்களில் தோற்று விட்டதை வைத்து இழித்துப் பேசுகிருகள். தூற்றுகிருர்கள்.

தூத்துக்குடி, சிதம்பரம், முதலிய இடங்களில் நாம் தோற்ருேம் அதை ஒப்புக் கொள்கிருேம். அதற்கான காரணங்களையம் சிந்திக்கிருேம். அதற்கு வழி வகைகளையும் செய்கிருேம். ஒரு அரசியல் கட்சி தேர்தலில் தோற்றுவிடுவதால் மட்டும் அது அழிந்து விடாது, தேர்தல் ஒன்று தான் அரசியல் கட்சியின் நோக்கமல்ல. பல நோக்கங்களில் தேர்தலும் ஒன்று, தேர்தலில் தோற்றதை வைத்து எங்களைத் தவருன முறையில் தூற்ற வேண்டாம். சென்னை நகரமன்றத் தேர்தலில் நீங்கள் தோற்றுவிட்டதால் உங்களுக்கு செல்வாக்கு குறைந்து விட்டது என்பது நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா இதுஎதைக்குறிக்கிறது. என்ருல் ஒருவன் கல்யாணத்திற்காக நாலு இடங்களில் பெண்ணைப் பார்தது நாலு இடங்களிலும் பெண் முடியாததால் அவனுக்கு திருமண ஆசையேபோய் விடுமா? அல்லது திருமணமே வேண்டாமென்று சொல்லி விடுவானு? அப்படி அறிவுள்ளவன் சொல்ல மாட்டான். இங்க இடமில்லை யென்ருல் மற்ருெரு இடத்தில் பெண்ணைப் பார்த்து திருமணம் செய்து கொள்வான். இதுதான் உலகத்தில் நடைபெறும் பழக்கம். வேண்டுமானுல் நமது காமராசருக்கு இது தெரியாமலிருக்கலாம், அவர் கலியாணமாகாதவர். நான் இப்படிக் கூறுவதால் பெண் கிடைக்கவில்லை என்று கருத வேண்டாம். அவருக்கு பலர் பெண் கொடுக்முன் வந்தார்கள். அவருக்கு விருப்பமில்லாத காரணத்தால் அவர் கலியாணம் செய்து கொள்ளவில்லை

அதைப் போலவே நாங்களும் நான்கு இடங்களில் தோல்வியுற்ருல் ஐந்தாவது இடத்தில் வெற்றி பெறுகிருேம். ஒரு தேர்தல் தோல்வியை வைத்து ஒரு அரசியல் கட்சியைத் தாக்குவது நாகரீகமல்ல; இன்று நாம் சொல்லுகின்ற நமது லட்சியக் கொள்கைகள் எங்கும் பரவி வருகிறது. யாராலும் எந்த இடத்திலும் பேசப்பட்டு வருகிறது.

டெல்லி பாராளு மன்றத்தில் நமது கட்சி கருத்துகளை. கம்யூனிஸ்டுக் கட்சி அங்கத்தினர்கள், பிரஜா சோஷலிஸ்டு கட்சிக்காரர்கள் மற்றும் எதிர் கட்சிக்காரர்கள் அனைவரும் பேசி வருகிருர்கள். அங்கு நடைபெறுகின்ற விவாதங்களில் தென்னகத்தை ஏன் புறக்கணித்தீர்கள்" "தென்னகத்திற்கு இதை ஏன் செய்யவில்லை" "வடநாட்டில் புதிப்பித்தது போன்று ரயில் பாதைகளை தென்னகத்திற்கு ஏன் செய்யவில்லை என்பது போன்ற பல கேள்விகள் அங்கே எழுப்படுகிறது. இது எதைச் சேர்ந்தது? நம்முடைய கொள்கையல்லவா! நாம் சொல்லுகின்ற கருத்துக்கள் எங்கும் பரவியுள்ளது என்பது விளங்கவில்லையா!

இன்று காங்கிரஸ்காரர்கள் அடுத்து வரும் தேர்தலை வைத்து நம்மை தாக்கிப் பேசுவதுடன் ஒழித்துகட்டுவதாகவும் பேசுகிருர்கள்,

சமீபத்தில் காஞ்சிபுரத்திற்கு வந்து பேசிய காங்கிரஸ் தலைவர்களும். அமைச்சர்களும் அடுத்து வரும் தேர்தலில் என்னை தோற்கடிக்க போவதாகவும் நான், தேர்தலில் நிற்கமாட்டேன் என்றும் பேசி வருகிருர்கள். இப்போது நடை பெறுவது 1960, 1962ம் வருடம் நடைபெறும் தேர்தலைப்பற்றி இப்போதே பேச ஆரம்பித்து விட்டார்கள்.

(10ம் பக்கம் பார்க்க)

## திருமணம்

இலுப்பூர் மாலைமணி விற்பனையாளரும், பிரபல தி. மு. க. பிரமுகருமான

திரு எம், கே, அன்பரசுக்கும்

திருமதி அமிர்தத்திற்கும்

சென்ற 9—4—60ம் தேதியன்று

திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது,

மணவிழாவை

திரு சி. பி. சிற்றரசு

தலைமை தாங்கி நடத்தி வைத்தார் !

மணமக்களுக்கு ஏராளமான வாழ்த்துச் செய்திகளும், பரிசுகளும் வந்து குவிந்தன.

நாமும் மணமக்களை "வாழ்க, வாழ்க" என வாழ்த்துகிறோம்.

—ஆசிரியர்

# "பணத்தால் ஆட்சியில் அமர பகற்கனவு காண்கின்றனர் பாராள்வோர்"

## உண்டியலில் காசு சேருங்கள்; உண்மை ஆட்சியை நிலவச் செய்யுங்கள்!

(அண்ணா பேச்சு)

(9ம் பக்கத் தொடர்ச்சி)

"அண்ணாத்துரை அடுத்த தேர்தலில் காஞ்சீபுரத்தில் நிற்க மாட்டார். நின்றாலும் வெற்றி பெற மாட்டார். வேறு எங்காவது தேர்தலில் நிற்பார்" அவர் தேர்தலில் நிற்பதற்கு இடமே இல்லை. என்றும் பேசி வருகிறார்கள்,

நான் அவர்களுக்கு ஒன்று கூற ஆசைப்படுகிறேன். காஞ்சீபுரம் மட்டும் எனக்குச் சொந்த இடமல்ல,

தமிழகத்திலுள்ள எல்லா இடங்களும் எனக்குச் சொந்த இடம். அடுத்த தேர்தலில் எந்த இடத்தில் வேண்டுமானாலும் நிற்பேன். சென்னையிலிருந்து தூத்துக்குடி வரை எங்கு வேண்டுமானாலும் நிற்பேன் வெற்றியும் பெறுவேன். என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காங்கிரஸ் காரர்கள் அடுத்த தேர்தலுக்குப் பணத்தைத்தான நம்பியிருக்கிறார்கள். மக்கள் பலத்தை நம்பவில்லை. அவர்களோடு நாம் போட்டி போட வேண்டுமானால் நமக்குப் பணம் தேவை.

நான் பல கூட்டங்களில் கேட்டுக் கொள்வது போன்று இன்றும் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். தேர்தலுக்காக உங்களால் முடிந்ததை ஒரு காசு முதல் உண்டியலில் சேர்த்து வையுங்கள்.

நம்மிடம் பணம் படைத்தவர்களில்லை. பணம் படைத்தவர்கள் நம்மிடம் வர மாட்டார்கள். அவர்கள் காங்கிரசுக்குத் தான் ஆதரவு தருவார்கள். நம் கழகம் உங்கள் ஆதரவால் தான் வளருகிறது. ஆகவே 1962-ம் வருடம் நடைபெறும் தேர்தலுக்கு இப்போதிருந்தே பணத்தைச் சேருங்கள்.

அடுத்து நடைபெறும் ஒவ்வொரு கூட்டங்களுக்கும் உண்டியலைக் கொண்டு வந்து என்னிடம் காட்டுங்கள் உண்டியலில் பணம் சேர்த்து வருகிறோம் என்பதை எனக்கு அறிவியுங்கள் அப்போது தான் எதிரிகள் நமது பலத்தை அறிந்து கொள்ள முடியும். தேர்தல் நடைபெறும் போது தேர்தல் நிதி கேட்கப்படும் போது அன்று நிதியைக் கொடுங்கள். ஆகவே காங்கிரசை அடுத்த தேர்தலில் முறியடிக்க உண்டியலில தினம் காசுகள் போடுங்கள் மனப்பூர்வமாக கொள்கைகளை ஏற்றுக் கொள்கிறவர்கள் இதைச்செய்யுங்கள். கொள்கையை ஏற்றுக்கொள்கிறவர்களை—கழகத்து நண்பர்களைக் கேட்டுக் கொள்கிறேன். சென்னையில் முதன் முதலாக ஆயிரம் பேர்கள் செய்து காட்டுங்கள், கொள்கைகளில்நம்பிக்கையில்லாதவர்கள் பத்துக் கூட்டத்துக்கு வாருங்கள். எங்கள் பேச்சுக்களைக் கேட்டால் பின்னால் நீங்களே உண்டியலில் காசுகள் போடுவீர்கள்.

இங்கு நமது தோழர்கள் பேசும் போது, காங்கிரஸ்காரர்கள் என்னையும் கழகத்தையும், நமது தோழர்களையும் ஆபாசமாகத் தாக்கி வருவதை மனம் வருந்திச் சொன்னார்கள். தூற்றாமல் பின் என்ன செய்வார்கள். காங்கிரஸ்காரர்கள் மட்டுமா நம்மைத் தூற்றுகிறார்கள். எல்லோரும் தூற்றுகிறார்கள். அதை யேன் நாம் பொருட்படுத்த வேண்டும் தூற்றுவதால் குறைந்துவிட மாட்டோம்.

பெரியார் ராமசாமியைத் தூற்றியதைவிடவா நம்மைத் தூற்றுகிறார்கள்.

எனக்கு ஒரு விஷயம் நினைவுக்கு வருகிறது, திருப்பூர் என்று நினைக்கிறேன்.

பெரியார் அவர்கள் சுயமரியாதைப் பிரச்சாரம் செய்து வருகின்ற போது, மேல் நாட்டுச் சுற்றுப் பிரயாணம் செய்தார் திரும்பிவந்ததும்பொதுவுடைமைப் பிரச்சாரம் செய்து வந்தார். திருப்பூர் கூட்டத்திலும் பொதுவுடமைப் பிரச்சாரம் செய்தார். அப்போது பெரியார் அவர்களுடன் அவரது மனைவியார் நாகம்மையாரும் சென்றிருந்தார்.

பெரியார் அவர்கள் பொதுவுடமையைப் பற்றிப் பேசினார். அதைக் கேட்டுக் கொண்டிருந்த ஒரு ஆணவம் பிடித்த காங்கிரஸ்காரன் எல்லாம் "பொதுவுடமை என்று கூறுகிறீர்களே. அதோ உங்கள் பக்கத்திலிருப்பவர்களும் நாகம்மாளைப் பார்த்து பொதுவுடமையா" என்று கேட்டான். உடனே பெரியார் ஆத்திரப் படாமல் பொறுமையாக "இப்படிக் கேட்பது பண்பல்ல-முறை கேடான கேள்வி நீ சுட்டிக் காட்டியதை பொதுவுடமை என்று நினைத்து அவர்கள் அருகில் சென்று பார். கிடைப்பதைப் பெற்றுக் கொள்" என்றாராம். இதைவிட ஆபாசமாக இனி என்ன பேச வேண்டும். பேசுவதை எல்லாம் பேசி விட்டார்கள்! இனி என்ன பேச முடியும். உங்களுக்கு ஒன்று உறுதியாகக் கூறுகிறேன். தூற்றிப் பேசும் கூட்டங்களுக்குப் போவதானால் அவர்கள் பேசுவதை பொறுமையாக கேட்கும் சக்தி இருந்தால் அங்கு போங்கள். போய்உட்காருங்கள் வெற்றிலை போடுங்கள் அவர்கள் பேசப் பேச எச்சிலை துப்பிக் கொண்டே கேட்டுக் கொண்டிருங்கள் கேட்கும் சகிப்புத் தன்மை இல்லா விட்டால் அங்கு போகாதீர்கள். போய் குழப்பம் செய்யாதீர்கள், குழப்பம் நடந்தது என்று எனக்குத் தெரிந்தால என் மனம் மிகவும் வருந்தும்; அதைக் கேட்டு சகிக்க மாட்டேன். குழப்பம் செய்வதால் நமக்குத் தான் நஷ்டம். அவர்களுக்கு லாபம் அதிகம் கூட்டங்களுக்குத் தடை போடுவார்கள். இந்த நிலை ஏற்படக் கூடாது. சேலத்தில் சிறிது குழப்பம் ஏற்பட்டதால் 4 வாரம் தடை போடப்பட்டதால் அங்கு கூட்டங்கள் நடைபெற முடியவில்லை ஆகவே நீங்கள் கண்ணியத்துடனும் கட்டுப்பாடுடனும் கட்டுப்பாடுடனும் நடந்து கொள்ள வேண்டும் அவர்கள் எதுவேண்டுமானாலும் பேசிக் கொள்ளட்டும். மற்றபடி நம்முடைய கழகம் செய்து வரும் எல்லாப் பணிகளுக்கும் உங்கள் ஆதரவைத் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு உங்களிடமிருந்து விடை பெறுகிறேன்!


சுவை குன்றாத சொல்லோவியம்!
தேன் சொட்டும் தொடர் காவியம்!

1962ம் ஆண்டு வர இருக்கிற பொதுத் தேர்தலை மையமாக வைத்து நகைச்சுவையோடு பின்னப்பட்ட காதல் நிறைந்த, கருத்துப் பொதிந்த கொள்கைக் காவியம்.

★

பி. எஸ். இளங்கோ
எழுதும்
தேர்தல்புரி யாத்திரை

★

17-4-60ம் தேதி முதல் மாலை மணியில்
தொடர் காவியமாக வெளிவருகிறது!
உங்கள் இதழுக்கு இன்றே முந்திக்கொள்ளுங்கள்!

# காந்தியைப்பற்றியும்-கதரைப்பற்றியும் அறியாதவர்கள் காங்கிரசில் இருக்கிருர்கள்!

## மக்கள் விழித்து நம்பக்கம் வந்து விட்டார்கள்!

### ஈரோட்டில் பொதுச் செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் முழக்கம்!

19-3-60 ௳ தேதி ஈரோடு பட்டக்காரர் தோட்டத்திற்கு பின்புறமுள்ள மைதானத்தில் (24-வது வட்டம்) நகர தி.மு.க. சார்பில் மாலை 6-30 மணிக்கு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் சேலம் திரு. சீனிவாசன் அவர்களின் இன்னிசை விருந்திற்குப் பின் டாக்டர் திரு. டி. எஸ். பாஸ்கரன் M. B. B. S. கொமாராபாளையம் தோழர் பாலசுப்ரமணியம்; தோழர் ஈ. ஏ. மதார்சா ஆகியோர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளை விளக்கி சொற்பொழிவாற்றிய பின் தி.மு.க. பொதுச் செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் ஆற்றிய பேருரை வருமாறு:—

மாண்புமிக்க நண்பர்களே! தொழிலாளர் தோழர்களே!! பெரியோர்களே !!! தாய்மார்களே!!!!

ஏறத்தாழ இன்றைக்கு ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு நான் இங்கு வந்திருந்தேன். அதன் பின்னர் நான் இன்று தான் உங்கள் மத்தியிலே வந்துள்ளேன். இந்த வாய்ப்பை எனக்கு ஏற்படுத்திக் கொடுத்த நகர தி. மு. 'கழகத்திற்கு என் நன்றி. மற்றும் என் மீது உள்ள பற்றின் காரணமாகவும்; கழகத்தின் மீது கொண்டுள்ள பற்றின் காரணமாகவும் வந்து இங்குக் குழுமியுள்ள மக்களுக்கும் முதற் கண் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்!

இந்தப் பகுதியில் நமது கழகத்தின் கருத்துக்கள் பரவாமல் இல்லை; இருந்த போதிலும் நமது கழகத்தின் கருத்துக்கள் என்னும் விதை இன்னும் பலருடைய உள்ளத்திலே விதைக்கப்பட வேண்டியிருப்பதால், அதற்காக இந்தக்கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறது.

இன்று நமது கழகம் பட்டி தொட்டிகளிலும் கூட வளர்ந்து வருகிறது. நமது கொள்கைகள்; படித்தவர், பாமரர், விவசாயி; உத்தியோகஸ்தர் ஆகிய யாவர் உள்ளங்களிலும் பதிந்து வருகிறது. நமது கழகம் 1950ல் இருந்ததை விட 1.60ல் இருபது முப்பது மடங்கு வளர்ந்து இருக்கிறது; கிளைக் கழகங்கள் பெருகி இருக்கின்றன. அன்று நமது கழகக் கொடிகளை வெட்டி வீழ்த்தி தூக்கி எறிந்த கைகள் இன்று அதே கொடிகளைத் தேடி எடுத்து உயரப் பறக்கவிடும் அளவிற்கு வளர்ந்திருக்கிறது; அன்று இகழ்ந்தவர்கள் இன்று புகழ்கிருர்கள்; அன்று இவர்களால் என்ன ஆகும் என்று கேட்ட அதே வாயால் இன்று இவர்களாலும் ஆகும் என்று சொல்லும் அளவிற்கு நமது கழகம் வளர்ந்திருக்கிறது.

முன்பு ஒரு சமயம் (நமது கழகம் ஆரம்பநிலையில் உள்ள காலத்தில்) கொமாராபாளையத்தில் நமது கழகத்தின் சார்பில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. அக் கூட்டத்தில் நமது நண்பர் மதியழகன் பேசிக் கொண்டிருந்தார். அச் சமயத்தில் (இங்கு எனக்கு முன்பு பேசியவர்) கொமாராபாளையம் பாலசுப்ரமணியம் அவர்கள் கொள்கையற்றவர்களுக்குக் கூட்டம் வேருு என்று ஆட்களை ஏவி விட்டு கூட்டத்தில் குழப்பம் விளைவித்தார். அன்று நண்பர் பாலசுப்ரமணியம் அவர்கள் கொமாராபாளையம் நகர சபையில் ஒரு காங்கிரஸ் மெம்பர். இன்று அதே பாலசுப்ரமணியம் நமக்கு கொள்கையில்லை என்று அன்று சொன்ன அதே வாயால் இன்று நமது கொள்கைகளை பட்டி தொட்டிகளெங்கும் பரப்பி வருகிருர். இது போல அநேக உதாரணங்கள் காட்டலாம். ஒன்று மட்டும் உறுதியாகச் சொல்லுகிறேன்; கண்ணியத்தோடு பணியாற்றும் நமது இதயங்களை; மாற்றுக் கட்சியினர் திட்டுவதாலோ அசைத்து விடமுடியாது.

சில கூட்டங்களில் காங்கிரஸ் கட்சி நண்பர்கள் நமது அண்ணுவை "வாடா போடா" என்று கூட பேசி இருக்கிருர்கள், அதனுல் நமது அண்ணுவின் புகழ் மங்கி விட்டதா? காமராஜர் கேட்டிருக்கிருர் அண்ணுவிற்கு பூகோளம் தெரியுமா? என்று சந்தைக் கடை வார்த்தைகளைவிட ஆபாசமாகத் திட்டுவதால் நமது கழகம் அழிந்து விடும் என்று நினைத்தால் அந்த எண்ணத்திலே அவர்கள் நீடூழி வாழட்டும், ஏன் எங்களை திட்டுகிறீர்கள் என்று நாங்கள் கேட்கவில்லை; கேட்கவும் மாட்டோம் ஏனென்ருல் எங்கள் இதயம் திடமானது. சந்தைக் கடை புத்தகத்தைப் படித்து விட்டு வேண்டுமானுலும் திட்டுங்கள்; அதனுல் கழகம் அழிந்து விடாது. அண்ணுவை ஆபாச வார்த்தைகளால் திட்டுவதால் அண்ணுவின் புகழ் மங்கி விடாது. ரோஜா மலரை என்ன பெயரிட்டு அழைத்தாலும் அதன் மணம் மாருது.

ரோஜா மலரை கற்ருழைப்பூ என்று சொன்னுல் இவர்கள் சொல்லி விட்டார்கள் என்பதற்காக ரோஜாவின் மணம் கெட்டு விடாது; சொன்னவர்களின் வாய் தான் கெட்டுவிடும்! அப்படி திட்டுபவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மக்கள் மத்தியிலே ஆதரவு இல்லை என்று நினைத்தால், அந்த எண்ணத்திலே அவர்கள் நீடூழி வாழட்டும்,

வாதியிடம் பிரதிவாதியோ; பிரதிவாதியிடம் வாதியோ ஆதரவான சொற்களை எதிர்பார்க்க முடியாது. அவர்கள் எதிர்பார்ப்பதெல்லாம் நீதிபதியின் தீர்ப்பைத் தான். அது போல் நாங்கள் மக்கள் தீர்ப்பை நாடுகிரேும், மாற்றுக் கட்சியினர் நம்மை புகழ்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது; மக்கள் தான் எடை போட்டு நீதி வழங்க வேண்டும்.

காமராசரின் கல்வியையும்; அண்ணுவின் பொருளாதார அறிவையும் எடை போட்டுப் பார்க்கட்டும். சட்ட மன்றத்தில் நண்பர்கள் கேட்கும் கேள்விகளுக்குக் கூட பதில் சொல்ல காமராசர் திராணியற்றவர். இதை நாட்டு மக்கள் சிந்தித்து எடை போட்டு தீர்ப்பளித்ததின் விளைவு தான் இன்று ஈ. வெ. கே. சம்பத் எம்.பி. யாகவும்; சட்டசபையிலே 15 பேர்களும்; கணக்கற்ற நகரசபைகளிலும் நமது சார்பில் தோழர்கள் வந்துள்ளனா, இது தான் மக்கள் தீர்ப்பு.

இவைகளை எல்லாம் பார்த்தும் நாம் வளரவில்லை என்று மாற்றுக் கட்சியினர் சொன்னுல் அதற்காக நாம் கவலைப்பட வேண்டியதில்லை.

எதிரிகள் போடும் தப்புக் கணக்குகள் எப்பொழுதுமே நமக்கு லாபம் தான். திட்டுவதிலேயே மிகவும் மோசமாகத் திட்டுபவர் பெரியார் ஈ.வெ ரா. அவர்கள். அவர் திட்டியும் நாம் அழிந்து விடவில்லை; நமது கழகம் வளர்ந்திருக்கிறது. வளர்ந்தது போதாது! இன்னும் வளர வேண்டும்: மெதுவாக வளர்ந்து கொண்டும் இருக்கிறது.

1810ல் ஈரோட்டில் காங்கிரஸ் இருந்ததா? என்ருல் இல்லை. இன்று அது போல் நமது கழகக் கிளைகள் இல்லாத இடங்களில் நாள் தோறும் கிளைக் கழகங்கள் தோன்றி வருகின்றன, இன்று இங்கு இக் கூட்டத்திற்கு வந்திருப்பவர்கள் எல்லோருமே நமது கழகத்தைச்சேர்ந்தவர்களென்று சொல்லி விட முடியாது.

உண்மையாக நமது கழகத்தின் பேரிலுள்ள பற்றின் காரணமாகவும் வந்திருக்கலாம்! சிலர் இவர்கள் என்ன பேசுகிருர்கள் என்று கேட்க வந்தவர்களும் இருக்கலாம்! சிலர் நெடுஞ்செழியன் எப்படி இருப்பான்? அவனை பார்க்கலாம் என்றும் வந்திருக்கலாம். ஆகவே இவர்கள் எல்லோருமே கொள்கைகளை புரிந்து கொண்டவர்கள் என்று எண்ணும் அளவிற்கு நாம் முட்டாள்கள் அல்ல.

நமது கழகத்தின் விதைகள் தூவப்பட வேண்டிய இடங்கள் ஏராளம், அந்த இடங்களில் எல்லாம் நமது கழகத்தின் விதைகள் தூவப்பட வேண்டும்,

நாம் வளர்ந்து கொண்டிருக்கும் இதே நேரத்தில் காங்கிரஸ் வீழ்ந்து கொண்டு இருக்கிறது.

1947-ல் நூற்றுக்கு நூறு நகர சபைகள் காங்கிரஸ் கையில்; இன்று நூற்றுக்கு 20; 25 தான் அவர்கள் இருக்கிறது.

உலகம் சுற்றியவர்; அகில உலக நாடுகளாலும் வரவேற்கப் பட்டவர்; பட்டங்கள் பல பெற்றவர் இந்திய பிரதமர் பண்டித நேரு அவர்கள் நமக்கு முன்பாக நம்மையே, காட்டுமிராண்டிகள் முட்டாள்கள், நாகரிகம் தெரியாதவர்கள் என்று திட்டினுர். அதனுல்நாம் அழிந்துவிட்டோமா? இல்லையே வளர்ந்து தானே வருகிருேம். அடபேர்பட்ட நேரு என்னும் 'அம்மியே; நமது கண்ணியம் என்னும் ஆடிக் காற்றில் பறக்கும்பொழுது; சாதாரண இலவம் பஞ்சுகளான காமராசரும், சுப்ரமணியமும் திட்டியா நாம் அழிந்து விடப் போகிருேம் காங்கிரஸ் கட்சி இன்று மக்கள் ஆதரவால் வாழவில்லை; பணக்காரர்களின் தயவாலும், பணத்தாலும் வாழ்கிறது. அதிலும் போட்டி ஏற்பட்டு விட்டது.

அன்று காங்கரஸ் கட்சியின் தூணுக விளங்கிய இராசகோபாலச்சாரியார் அவர்கள் இன்று காங்கிரஸ் கட்சியைக் குழி தோண்டிப் புதைக்க கிளம்பி விட்டார்,

அன்று காங்கிரஸ் கட்சியை புகழ்ந்த அதே வாயால் இன்று பழிக்கிருர். அவர் விதைத்தாலும் அறுவடை நமதே, இன்று காங்கிரஸ் கட்சி இருவரை சமாளிக்க வேண்டியுள்ளது.

அங்கிருந்து வெளி வந்து இன்று காங்கிரசுக்கு எதிரியாகி விட்டார் இராசகோபாலாச்சாரியார். மக்களின் நல்வாழ்விற்காக தனிநாடு கேட்கிருேம்.

(12ம் பக்கம் பார்க்கவும்)

Registered as a Newspaper in CEYLON | இலங்கையில் 20 சதம்
Regd No M.7074 | விலை 16 காசு | MALAIMANI | Phone No. 83285

# சின்னஞ்சிறு நாடுகள் விடுதலை அடைந்துள்ள போது நாம் ஏன் அடைய முடியாது !

(நெடுஞ்செழியன் பேச்சு)

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

நாம் இராசகோபாலாச்சாரியாருக்கும் நமக்கும் கொள்கையில் ஒற்றுமையில்லாத போதிலும் அவரால் நமக்கு லாபம் தானே நஷ்டம் இல்லை.

இப்பொழுது 1940ம் வருடத்தில் எடுத்துக் கொண்டால் ஒரு வீட்டில் உள்ள எஜமானர் முதல் கார்டிரைவர் வரை எல்லோரும் காங்கிரஸ்காரர்களாக இருந்தார்கள். ஆனால் இன்றோ ஒரே வீட்டில்(ஒரு குடும்பத்தில்) பல கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள்.

நமது மந்திரிகள் பேசும் பொழுது கூட்டம் அவர்களுக்கு; ஓட்டு நமக்குத்தான் என்று பேசுகிறார்கள். அதை நாம் மறுக்கவில்லை. இன்னும் 2 தேர்தல்களுக்கு நீங்கள் காசை நீட்டி வோட்டு வாங்கி வெற்றிபெற்று விடலாம். ஆனால் நிலைமை என்றுமே இப்படி இருக்காது.

இன்று 18 வயதிலும்; 19 வயதிலும் உலாவித்திரியும் இளம் காளையர்கள் கூட்டம் வயது வந்த பின் நீங்கள் நீட்டும காசுக்காக மயங்கி உங்களுக்கு ஓட்டு போட்டுவிட மாட்டார்கள்.

இன்று காங்கிரஸில் காந்தியைப்பற்றித் தெரியாதவர்களும்; கொடியின் நிறத்திற்கு விளக்கம் தெரியாதவர்களும் ஏராளமாக இருக்கிறார்கள்.

வெள்ளைக்காரனின் அவமானச் சின்னமான சர் என்னும் பட்டத்தை ராஜாசர் அண்ணாமலை செட்டியார் வைத்துக் கொண்டு இன்று காங்கிரசில் இருக்கிறார். ஒரு சமயம் அண்ணா அவர்கள்; நமது திராவிட நாட்டு பிரிவினை பிரச்சனையை ஐ. நா. சபைவரை போவேன் என்று சொல்லியிருக்கிறார். அதற்கு சில மந்திரிகள் சொல்லியிருக்கிறார்கள் ஐ: நா. சபை வரை கொண்டு போனால் அவர்கள் ஏற்றுக் கொள்வார்களா என்று சொல்லியிக்கிறார்கள்.

அவர்களுக்கு ஒரு சிறிய உதாரணம் காட்ட விரும்புகிறேன். அதாவது சமீபத்தில் 7—3—60 ஆப்ரிக்காவைச் சேர்ந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் காலனி நாடான "தங்கநீக்கா" என்னும் நாடு தன்னை சுதந்திர நாடாக பிரகடனப் படுத்திக் கொண்டு அந்த பிரகடனத்தை ஐ. நா. சபையின் டாக்குமெண்டாகப் பதிவு செய்து கொள்ளப்பட்டுள்ளது. இவ்வளவும் செய்த அந்நாட்டின் பரப்பளவு என்ன என்றால்? ஒரே ஒரு சதுர மைல் பரப்பளவு தான், அந்த நாட்டின் சுதந்திர பிரகடனத்தை ஏற்றுக் கொள்ளப்படும் பொழுது 1800 சதுர மைல் பரப்பளவும், ஒன்பதரை கோடி மக்களைக் கொண்டுள்ள நமது நாட்டின் கோரிக்கைகளை ஐ. நா. சபை ஏன்? ஏற்றுக் கொள்ளாது?

இன்று நமது நாட்டை விட 149 சிறிய நாடுகள் சிறிய நாடுகள் சுதந்திரமாக வாழும் பொழுது எல்லா வகையிலும் வளமுள்ள நாம் ஏன் தனித்து வாழ முடியாது? இன்று சுதந்திரம் கிடைத்திருப்பது இங்குள்ள மக்களுக்கு அல்ல; வடநாட்டில் இருப்பவர்களுக்கு தான், கோடிக் கணககான ரூபாய்கள் போட்டு அங்கே திட்டங்களை நிறைவேற்றப் படுகின்றன; ஆனால் இங்கே வாய்ப்புள்ள பல திட்டங்களை நிறைவேற்றக். கூட தயங்குகிறது. இப்படி இருக்கும் அகில இந்தியா நமக்கு பயன் படாது. வெள்ளையனை விரட்டுவதற்காக வடநாட்டாராகிய நீங்களும் தென்னாட்டவராகிய நாங்களும் ஒன்று சேர்ந்தோம்.

நமது எதிரியாகிய வெள்ளையன் இப்பொழுது போய் விட்டான். ஆகவே நீங்கள் உங்கள் நாட்டை ஆண்டு கொள்ளுங்கள்; நாங்கள் எங்கள் பொன்னுடான தென்னாட்டை ஆண்டு கொள்ளுகிறோம்.

அதை விட்டு உங்களது எல்லையை காக்கவும் உங்கள் நாட்டு மக்களுக்கு வசதிகளை செய்து கொடுக்கவும் எங்கள் நாட்டு மக்களின் வரிப்பணத்தை உங்களிடம்கொடுத்து கொடுத்து விட்டுநாங்கள் ஏன் உங்களிடம கையேந்துகின்ற நிலையில் இருக்க வேண்டும்? அப்படியாவது எங்கள் வரிப் பணத்தைக் கொண்டு எல்லையைக் காப்பதற்காக ராணுவத்திற்காக செலவிட்டாயே! அந்த எல்லையை யாவது சரியாகக் காப்பாற்றிக் கொள்ள முடிந்ததா உம்மால்? நிர்வாகத்தில் ஊழல்களை வைத்துக் கொண்டு எதிரியை எபபடி சமாளிக்கப் போகிறார்கள்?

இன்று எல்லா மாநிலங்களிலுமுள்ள ஸ்டேட் பாங்க்கு ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்துள்ளார்கள், அவர்கள் வேண்டுமென்றோ; திமிரினாலோ வேலை நிறுத்தம் செய்யவில்லை. அவர்கள் வாழ்வதற்குத் தேவையான ஊதியம் கோரியே வேலை நிறுத்தம் செய்துள்ளார்கள். அவர்களின் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டியது ஒரு பொறுப்புள்ள அரசாங்கத்தாரின் கடமையாகும் அதே போல் துறைத்தன இலாக்காக்களில் உள்ள லஞ்ச குற்றங்கள் ஒழிய வேண்டுமானால் அந்த ஊழியர்களுக்குவாழ்வதற்கு தேவையான ஊதியம் கொடுக்க வேண்டும். ஆகவே தோழர்களே வடவரின் பிடியிலிருந்து விடுபடவும் நம்மை நாமே ஆண்டு கொள்ளவும்; நமது வளங்களும், அறிவும் நமக்கு பயன்படவும் நாம் தனி நாடு பெற வேண்டியது அவசியம் என்று கூறிக்கொண்டு உங்களிடமிருந்து விடை பெறுகிறேன்.

---

(தலையங்கம் 2ம் பக்கத் தொடர்ச்சி)

சிவாஜி கணேசன் வேண்டியவராக இருக்கலாம். சிவாஜி கணேசன் உற்ற நண்பராகக் கூட இருக்கலாம். ஆனால் அவர் நமது இலட்சியத்தைப்பழிக்கும் போது உண்ட வீட்டுக்கு உலை வைக்கும் போது, நன்றியை மறந்து நாவைக் கண்டபடி அசைக்கும்போது பார்த்துக் கொண்டிருப்பது, நண்பர் என்று கருதுவது இலட்சியவாதிகளுக்கு அழகல்ல! இதை உணர்ந்து கொண்டால் மாலைமணியை விட ஒரு பத்து கல் தூரம் முந்தியே நடக்கலாம்! இல்லா விட்டால் அந்த வெற்றி பக்கமே திரும்ப முடியாது!

நாங்கள் இதை பொறாமையால், பொச்செரிப்பால் எழுதுவதாகக் கருதக் கூடாது! எங்களுக்கு இலட்சியம் தான் முக்கியம்! அந்த இலட்சியம் வளர யார், யார் பாடுபட்டாலும் அவர்களை பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்!

ஆனால் போட்டி மனப்பான்மையை உண்டாக்குவது மிக தீதானது, யாருக்கும் எந்த நன்மையையும் உண்டாக்காது! இதை உண்மையான இலட்சியவாதிகள் நிச்சயமாக உணர்வார்கள்!

யாருக்கும் போட்டிக் கூடாது என்பதற்காகவே மாலைமணி தனி வழியைப் பின்பற்ற ஆரம்பித்தது! ஆனால் மாலைமணி பின்பற்றும் வழியை சிலர் கடைபிடிக்க ஆசைப்படுகிறார்கள்! அவர்களது ஆசையில் நாங்கள் குறுக்கே நிற்கவில்லை, நிற்கவும் மாட்டோம்— நிற்பது பண்பும் அல்ல! ஆனால் போட்டி எண்ணத்தோடு வராதீர்கள். பொறாமையோடு எந்த காரியத்திலும் இறங்காதீர்கள் !

யார் போட்டியிட்டாலும் மக்களுடைய சக்தி மாலைமணிக்கு இருக்கும் வரை மாலைமணியின் வளர்ச்சியை, செல்வாக்கை, சிறப்பை ஒருக்காலும் குறைக்க முடியாது!

மாலைமணியை பொலிவாக்கவும், வலிவாக்கவும். நல்ல வனப்பை உண்டாக்கவும் பெரு முயற்சியில் ஈடுபட்டுள்ளோம்!

மாலைமணி வேலையை செய்வதற்காக மட்டும் ஒரு தனி அச்சகமும், மின்விசையால் இயங்கக்கூடிய ஒரு டபுள் டெம்மி அச்சு யந்திரமும் வாங்கப்பட்டு, வேலையும் தொடங்கப்பட்டிருக்கிறது!" சென்ற வாரத்திலிருந்து "அமிர்தம் அச்சகம் வேலை செய்யவும் தொடங்கி இருக்கிறது! இனி மாலைமணி மூன்று தினங்களுக்கு முன்னதாகவே, வெளிவந்து மக்கள் மனதை மகிழ்விக்கும்!

இதற்கிடையில் மாலைமணியை தின இதழாக்குவதற்கான வேலைகளையும் சிறப்பாக கவனித்து வருகிறோம்! தின இதழ் வெளியிடுவதற்கு ஒரு அச்சு யந்திரமும் கூடியவரைவில் இறக்குமதி செய்யப்படும்! எல்லோரும் திகைக்கும் வகையில் மாலைமணி தின இதழாக வெளிவரும் நாள் விரைவில் வர இருக்கிறது என்பதை வாசகப் பெருமக்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகிறோம்!

மாலைமணிக்கு மக்களுடைய பேராதரவு பெருமளவு இருப்பதால் நாங்கள் பல சிறப்பான பணிகளைச் செய்ய திட்டமிட்டுள்ளோம்!

எனவே மாலைமணியோடு போட்டியிட முன்வருபவர்கள் தலை குனிவார்கள் என்பதும் மட்டும் உறுதி!

மாலைமணி—இல்லை மக்கள் விடும் இந்த சவாலை ஏற்றுக் கொள்ளதயார் தானா?

---

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி.எஸ். இளங்கோ கல்விப் பிரகாசம் பிரஸ்,
404 திருவல்லிக்கேணிஹைரோடு, சென்னை-5 அலுவலகம்: 1-35, வாணியர் தெரு. சென்னை-14.